
# சிங்கத்தின் நேர்மை

## பாடசாலை மாணவர்களுக்கான நூல்



ஆசிரியர் : எம்.எஸ்.எஸ். ஹமீது

LOYAL PUBLICATION
125, NEW MOOR STREET,
COLOMBO - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1772

# சிங்கத்தின் நேர்மை

கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

உள்ளடக்கம் :


1. தாய் சொல்லைத் தட்டாதே.
2. பெருமையால் வந்த கேடு.
3. ஆசை அழிவைத் தரலாம்.
4. பொறாமை கொண்ட குமுதா.
5. சிங்கத்தின் நேர்மை.
6. உயர்வான நட்பு.
7. தன்வினை தன்னைச் சுடும்.
8. நேர்மையின் சிறப்பு.
9. சமயோசித புத்தி.
10. தெருநாய்.
11. நற்செயல் தந்த பரிசு.
12. பாடம் படித்த பன்றி.
13. சரியான தண்டனை.
14. ஆபத்துக்குதவிய பிள்ளை.
15. அயோக்கியனும் திருடனும்.
16. எதிர்பாராத அதிஷ்டம்.
17. ஒழுக்கம் உயர்வைத் தரும்.
18. நல்ல தேடல்.
19. கொடுப்பார்க்கு குறைவில்லை.
20. பலநாட் கள்ளன் ஒருநாள் அகப்படுவான்.
21. செருக்கடக்கிய உபாயம்.



லோயல் பப்ளிகேஷன்
125, புதிய சோனகத் தெரு,
கொழும்பு – 12.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


முதற் பதிப்பு : பெப்ரவரி 2012

தலைப்பு : **சிங்கத்தின் நேர்மை**

பக்கங்கள் : 56 பக்கங்கள்

ஆசிரியர் : **எம். எஸ். எஸ். ஹமீது**

பதிப்பு : **லோயல் பப்ளிகேஷன்**

வெளியீடு : Loyal Publication
125, New Moor Street,
Colombo - 12.

விலை : ரூபா - 75/=

IBSN : 978-955-1711-61-0



தொடர்பு : A. JOGARAJAH
125, New Moor Steet,
Colombo - 12.

T.P : 011-2433874

0777556277





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சு
அனுமதிப்பத்திரம்

புத்தகத்தின் பெயர் ......சிங்கத்தின் நேர்மை...... அனுமதிப்பத்திர இலக்கம்
நூலாசிரியர் ......எம். எஸ். எஸ். ஹமீது...... கநுவெ/ 2/ 8738

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிட்ட இலங்கை அரசின் வர்த்தமான அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய மொழி, இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமானக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கபட்டுள்ளது.

விஜித வெலகெதர
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை
20.10...08...மாதம்...10...
கல்வி அமைச்சு இசுறுபாய, பத்தரமுல்ல
அனுமத்திப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி...2015. 08. 09...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන/தொலைபேசி இல/Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சு / Ministry: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax : 2784846

ඊමේල් /ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல
'Isurupaya' Sri Jayawardhanapura Kotte Battaramulla

ඔබේ අංකය. / உமது இல. / Your No.

මගේ අංකය / எமது இல. / My No. EPAB/2/ 8738

දිනය / திகதி / Date 2010. 08. 11

வண/திரு/திருமதி ..........................
எம். எஸ். எஸ். ஹமீது
..........................

## சிங்கத்தின் நேர்மை

தங்களால் இச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட புத்தகத்தை நூலகப் புத்தகமாக பாடசாலைப் பயன்பாட்டிற்காக அங்கீகரிக்கிறேன்.

02. இதனுடன் அனுப்பப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் அரச இலச்சினையுடன் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய புத்தகத்தின் முதல் பக்கத்தில் தெளிவாக தென்படக்கூடிய இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும். இவ் அனுமதிப்பத்திரத்தைப் பிரசுரிக்காது இருப்பது தவறான செயற்பாடு என்பதை கருத்திற்கொள்ளவும்.

03. அனுமதிப்பத்திரம் அச்சிடப்பட்ட மேற்கூறப்பட்ட புத்தகத்தின் பிரதியை ஆவணப்படுத்துவதற்காக இச் சபைக்கு தாமதம் இன்றி சமர்ப்பிக்க வேண்டும்.

04. இவ் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 2015.08.09 ம் திகதியுடன் முடிவடையும் என்பதுடன் அதற்குப் பின்னர் மீண்டும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். என்பதை மேலும் அறிவிக்கிறேன். அச்சிடும்போது மறுசீரமைப்புக்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

விஜித வெலகெதர
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

VIJITHA WELAGETHRA
Secretar
Educational Deparment
Advisory Board
Ministry of Education
'Isurupaya' Battaramulla



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சிறுவர் இலக்கியம் இன்று சர்வதேச அந்தஸ்தைப் பெற்றுவிட்டது. ஆங்கிலத்தில் ஹேறன்ஸ் கிறிங்டியன், அன்றேஸன் கதைகள் இவ்வகையில் புகழ்பெற்றவை. அநேகமாக ஆங்கில சிறுவர் இலக்கியங்களில் மாயாஜால சம்பவங்களே பெரிதும் இடம்பெறுகின்றன. அத்தோடு fairy tales, Witch craft, Giants, Dwarf போன்ற மந்திரவாதிக் கதைகளும் இடம்பெறுகின்றன.

தமிழில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி, வாக்குண்டாம் முதலிய அறநூல்கள் காலங்காலமாக நிலைத்து நிற்கின்றன. அறநூல்களை சிறுவர் இலக்கியமாக ஏற்கலாமா? என்று வாதிடுவோரும் உளர். ஆனால், மாயாஜால மந்திரக் கதைகளைவிட இந்நூல்கள் சிறந்த இலக்கியங்களேயாகும்.

மிருகங்கள் பெரும்பாலான சிறுவர் இலக்கியங்களில் பாத்திரங்களாக இடம்பெறுகின்றன. ஏசோப் பேபிள்ஸ் (Aesop's faldes) கதைகள் இந்தவகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவைபோன்று தமிழில் பஞ்சதந்திரக் கதைகள் அமைந்துள்ளன. மிருகங்கள் பாத்திரங்களாக உலவுவது சிறுவர்களுக்கு மிகுந்த கிளுகிளுப்பைத் தருகின்றது என்பதை நாம் அநுபவபூர்வமாகக் கண்டுள்ளோம்.

இந்தப் பின்னணியில் மருதமைந்தனின் சிறுவர் இலக்கியக் கதைகளை நோக்குவோம்.

இவருடைய கதைகளில் மாயாஜால, மந்திரஜாலக் கதைகள் இல்லை. அவை சாதாரண சிறுகதைகளைப் போலவே அமைந்துள்ளன. ஒவ்வொரு கதையிலும் ஒரு Morale சொல்லப்படுகின்றது. அதனால் அவை ஊடகமாக கதை முடிவில் வெளிப்படுகின்றன. இத்தகைய கதைகள் சிறுவர் மத்தியில் ஒரு நம்பகத்தன்மையை ஏற்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதைகள் உருவாவதற்கு இவர் ஓர் ஆசிரியனாக இருந்ததும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. இவர் தான் கற்பித்த சிறுவர்களுக்குச் சொல்வதற்காக ஒவ்வொரு கதையையும் கற்பனையில் உருவாக்கி வகுப்புக்களில் சொல்லி வந்துள்ளார்.

இக்கதைகள் வகுப்பு மாணவர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. அத்தோடு அவர்களை நல்வழிப்படுத்தியுள்ளன. அந்தவகையில் மாணவர்கள் இத்தகைய கதைகளை மேலும் மேலும் வேண்டிக் கேட்டுள்ளனர்.

கற்பனையில் தோன்றிய இக்கதைகளைக் காற்றோடு கலந்து போகாமல் குறித்து வைக்கப்பட்டதால் அவ்வப்போது சஞ்சிகை களிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன.

அந்தவகையில் இக்கதைகள் மாணவரின் உள்ளத்தில் ஆழப்பதிந்து அவர்களை வழிநடாத்தியும் வருகின்றன. மருதமைந்தன் இத்தகைய குழந்தைக் கதைகளை நிறைய எழுதியுள்ளபோதிலும் ஒரு சிலவற்றை தொகுத்து நூலுருவாக்க முனைந்துள்ளார்.

மொத்தம் 21 கதைகளே இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. சில நீளமாகவும் சில குறுகியதாகவும் அமைந்துள்ளன. என்றாலும் ஒவ்வொரு கதைப்பின்னலும் சிறுவர்களின் உள்ளத்தை வெகுவாகக் கவரக்கூடியதாகவே உள்ளன. அதுவே இக்கதைகளின் வெற்றியுமாகும்.

தவபதி
ஆரையம்பதி - 01

இரா. நாகலிங்கம்
(அன்புமணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

சிறுவர் உலகு ஒரு விசித்திரமானது. அதனுள் புகுந்து உலாவி வரக் கிடைக்கப்பெற்றவர்கள் பற்பல விநோத அனுபவங்களை உணரத் தவறமாட்டார்கள். சிறுவர்களின் மனோநிலை மாற்றங்களை அவதானித்து அவர்களுடன் உறவாடும்போது தான் உண்மையாகவே நாம் அவர்களிடம் எதிர்பார்க்கும் பயன் கிடைக்கின்றது.

சிறுவர்கள் சிறுவர்களாய் இருப்பார்கள்; திடீரென இளைஞர்களாகவும் மாறுவார்கள்; தாய், தந்தையராய் நடிப்பார்கள் ஆசிரியனாய், வைத்தியனாய் வருவார்கள்; வயோதிபராய் தெரிவார்கள். இவ்வாறு வேளைக்குவேளை தாம் விரும்பும் வேஷங்களில் தாமாகவே மாறிமாறி ஓடி விளையாடி சிரித்து மகிழ்ந்து தம் பொழுதைக் கழிப்பார்கள். அத்தகைய சிறுவர்களில் ஒருவராக நாமும் சேர்ந்து நடித்து மகிழுங்கால் ஏற்படும் இன்பம் எல்லையற்றதே!

இவ்வாறான அநுபவம் எனது 37 வருட கால ஆசிரியத் தொழிலில் சிலகாலம் மட்டுமே கிடைத்தது. அவ்வேளையில் நானும் அவர்களுடன் அவர்களாய் மாறி ஒன்று சேர்ந்து உறவாடியபோது ஏற்பட்ட மகிழ்ச்சி அநுபவங்கள் அளப்பரியன.

சிறார்களது மனோநிலை, எதிர்பார்ப்பு ஆகியவற்றைத் தெரிந்துகொண்டு அவர்களுடன் கூடிப் பழகும்போது அவர்கள் எம்மையும் நம்மவராய் ஏற்றுக்கொள்வதிற் காட்டும் உற்சாகம் மெச்சக்கூடியதே.

மேலும் அவர்களால் வெளிக்கொணரப்படும் அபிலாசைகள், குணாதிசயங்கள், திறமைகள், சிறப்பம்சங்கள் ஆகியவற்றைக் கண்டு நாம் பிரமிப்படையவே செய்வோம்.

இத்தகையோரின் திறமைகளை வெளிக்கொணர்ந்த மேம்படுத்துமுகமாக சில ஆக்கப்பாடுகளைக் கைக்கொண்டேன். அவற்றுள் சிறுவர் பாடல்களும் படிப்பினை கதைகளும் நல்ல பயனைத் தருவதாக அமைந்தன. அதன்காரணமாக அவற்றின் மூலமே எனது கற்பித்தலையும் கொண்டு நடாத்தலானேன். அதன் பயன் எனக்கு வெற்றியாகவே அமைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய படிப்பினைக் கதைகள் பாடல்கள் மூலம் சிறாரிடையே நான் எதிர்பார்த்த நல்ல மனப்பான்மை, உதவியொத்தாசை, நட்பு, நம்பிக்கை, பொய் சொல்லாமை, ஆற்றல்கள் போன்றன விருத்தியாவதை அவதானிக்கவும் முடிந்தது. அத்தோடு அவர்களிடமிருந்து நல்லொழுக்கப் பண்பாடுகளும் துளிர் விடத் தொடங்கின.

எனது கற்பனைகள் என்னுடைய அவதானத்தையும் அனுபவத்தையும் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும் இளஞ்சமூக நிர்மாணத்தின் முக்கியமான அறிவினைச் செயற்படுத்தும் வகையிலேயே அதனைக் கொண்டு சென்றேன். இதனால் இக்கதைகள் சிறுவர் மத்தியில் மிக மிக வரவேற்பைப் பெற்றன.

மேலும் இப்படிப்பினைக் கதைகளை எம் இளஞ் சமூகத்தினர் படித்து இன்புறவேண்டுமென்ற நன்நோக்குடனேயே இவற்றைப் பிரசுரிக்கவும் விரும்பினேன். அந்தவகையில் இந்த முயற்சியில் கிடைக்கப்போகின்ற நிறைவு நல்ல பயனை அளிக்கவேண்டுமென்பதே எனது எதிர்ப்பார்ப்பாகும்.

இக்கதைத் தொகுப்பு கல்வி அமைச்சின் இலங்கை தேசிய நூலக அபிவிருத்தி சபையினால் அங்கீகரிக்கப்பட்டதோடு நூலகப் புத்தகமாகப் பாடசாலை பயன்பாட்டிற்காகவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியேயாகும்.

மருதமைந்தன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தாய் சொல்லைத் தட்டாதே

ஒரு காட்டில் ஒரு ஆமையும் ஒரு முயலும் நல்ல நண்பர்களாக இருந்தன. முயலுக்கு அழகான மூன்று குட்டிகள் இருந்தன. அதுபோல ஆமைக்கும் இரண்டு குஞ்சுகள் இருந்தன.

ஒரு நாள் முயலும் ஆமையும் பக்கத்தில் இருந்த தண்ணீர் மடுவுக்கு நீர் அருந்தச் செல்லும் அவற்றின் குட்டிகளும் குஞ்சுகளும் அவற்றுடன் கூடிச் சென்றன. நீர் அருந்திய பின் முயல் மடுவின் அருகாமையில் வளர்ந்திருந்த புல்லை மேயத்தொடங்கியது. ஆமையும் அங்கு காணப்பட்ட சிறிய சிறிய புழுக்குஞ்சுகளைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது.

அவ்வேளை முயற்குட்டிகள் மடுவுக்கு சற்று அப்பால் போடப் பட்டிருந்த தார்ப்பாதையை ஓடிக்கடப்பதும் பின் தாயிடம் ஓடிவருவதுமாக விளையாடின. இதனைப் பார்த்துக்கொண்டிருந்த ஆமைக்குஞ்சுகள் முயற்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிகளைப் போல் தாமும் ஓடி விளையாட ஆசைப் பட்டன. அவை தாயிடம் வந்து தாமும் ஓடி முயற்குட்டிகளைப்போல் விளையாட அனுமதி கேட்டன. அதை கேட்ட தாய் ஆமை, உங்களால் முயற்குட்டிகள் போன்று துள்ளி ஓட முடியாது; திடீரெனப் பாதையில் வாகனங்கள் வந்தால் ஆபத்தாகிவிடும். நீங்கள் போகவேண்டாமெனத் தடுத்துவிட்டு உணவு உண்பதில் கவனமாக இருந்தது.

முயற்குட்டிகள் பாய்ந்து பாய்ந்து ஓடிப் பாதையைக் கடப்பதும் பின்பு தாயிடம் பாய்ந்தோடி வருவதும் ஆமைக்குஞ்சுகளுக்கு மேலும் மேலும் ஆசையை உண்டாக்கின. ஆசை மேலோங்க ஆமைக்குஞ்சுகள் தாயின் சொல்லையும் மதியாது முயற்குட்டிகளைப் போன்று தாமும் மெல்ல மெல்ல ஓடிப் பாதையைக் கடந்தும் பின்பு தாயிடம் ஓடிவந்தும் விளையாடத் தொடங்கின.

ஆமைக்குஞ்சுகள் இரண்டு முறை ஓடிக்கடந்து மூன்றாவது முறை ஓடிப் பாதையை கடந்து வரும்வேளை பெரியதொரு வாகனம் பெரும் இரைச்சலுடன் ஓடிவந்தது. இதனைக் கண்ட முயற்குட்டிகள் விரைவாக பாதையை கடந்து தாயிடம் ஓடிவிட்டன. ஆனால், ஆமைக்குஞ்சுகளால் அவ்வாறு வேகமாக ஓடிகடக்க முடியவில்லை. வேகமாக ஓடிவந்த வாகனம் ஆமைக்குஞ்சுகளை சில்லுகளால் நசுக்கிவிட்டு ஓடி மறைந்தது. இதனைப் பார்த்துக்கொண்டிருந்த முயல், தன் குட்டிகளை அணைத்தபடி தாய் சொல்லைத் தட்டுவதாலும் தமது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயல்களில் ஈடுபடுவதாலும் வரும் கேடு இதுதான்" எனப் புத்தி கூறியதோடு, ஆமையின் பரிதாபநிலைமை கண்டு துக்கத்துடன் ஆமைக்கு ஆறுதல் கூறியது.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. பெருமையால் வந்த கேடு

ஒரு காட்டில் ஒரு பென்னம்பெரிய யானை வசித்து வந்தது. அது தனது உடல் பருமனினாலும் பலத்தினாலும் தன்னை விட யாரும் அந்தக் காட்டில் பலசாலியாக இருக்க முடியாது என்று நினைத்தது. அதனால் அந்த யானை அக்காட்டில் வாழ்ந்த ஏனைய மிருகங்களையும் மற்றைய பறவைகள், பிராணிகள் யாவற்றையும் மதியாது கர்வத்துடன் இருந்தது. இதனால் அந்தக் காட்டில் வாழ்ந்த சகல உயிரினங்களும் அந்த யானையுடன் வெறுப்புடன் இருந்தன.


ஒரு நாள் அந்த யானை சத்தமாகப் பிளிறிக்கொண்டு தனது துதிக்கையால் மரங்களைப் பிடித்து அசைத்துக்கொண்டும் அட்டகாசத்துடன் வழியால் வந்தது. இதனைக் கண்ட, கேட்ட ஏனைய உயிரினங்கள் அஞ்சி ஒடுங்கி இருந்தன. அவ்வேளை கட்டெறும்புகள் கூட்டமொன்று அந்த யானை வந்த வழியைக் கடந்துக்கொண்டிருந்தது. இதனைக் கண்ட யானைக்கு பொல்லாத கோபம் ஏற்பட்டது. தன்னை மதியாது அந்த எறும்புக்கூட்டம் வழியைக் கடப்பதாக எண்ணியது. அதனால் யானைக்கு மேலும் ஆத்திரம் கூடியது. "சீ அற்பப்பயல்களே, நான் வருகின்ற வழியில் குறுக்கே செல்ல உங்களுக்கு எப்படி தைரியம் வந்தது?" எனக் கோபத்துடன் அதட்டியது.

இதைக் கேட்ட எறும்புகள் மிகவும் பயந்தவாறு "ஐயா, பெரியவரே நாங்கள் தெரியாமல் வந்துவிட்டோம், தயவுசெய்து எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் அவ்வாறு நடந்துகொள்ள மாட்டோம்" என பணிவுடன் கெஞ்சிக் கேட்டன. ஆனால், யானை எறும்புகளின் கெஞ்சலையும் காதில் வாங்காது அவற்றை காலால் நசுக்கி கொல்லத்தொடங்கியது.

"ஐயோ, அம்மா, கடவுளே" எனக் கத்தியவாறு பல எறும்புகள் இறந்தன. சில எறும்புகள் காயத்துடனும் குற்றுயிருடனும் துடித்தன. இவற்றைக் கண்டும் யானைக்கு இரக்கம் ஏற்படவில்லை. அது எறும்புகளைக் கொல்வதிலே ஈடுபட்டுக்கொண்டிருந்தது. இவற்றை யெல்லாம் பாதையோரத்தில் பார்த்துக்கொண்டு நின்றிருந்த எறும்பொன்றுக்குப் பொறுக்கவில்லை. உடனே, அது யானையின் முன்னால் தைரியத்துடன் வந்து, "ஐயா, நீங்கள் மிகப் பெரியவர், நாங்களோ மிகச்சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்ப உயிர்கள். எங்களைக் கொள்வதால் நீங்கள் என்ன பலனைக் கண்டீர்கள்? தயவு செய்து எங்கள் இனத்தவரைக் கொல்லாது விட்டு விடுங்கள்" என அமைதியாகக் கேட்டது.

"டேய் அற்பப் பயலே, நீ என்னையா எதிர்த்துப் பேசுகிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று சத்தமிட்டபடி தனது துதிக்கையால் அந்த எறும்பை கிள்ளிச் சாவடிக்க முனைந்தது.

உடனே எறும்பு யானையின் துதிக்கையைத் தாவிப்பிடித்து அதன் மூக்குத் துவாரத்தினுள் புகுந்து நன்றாக கடித்துப்பிடித்துக் கொண்டது.

வேதனை தாங்கமுடியாத யானை தனது துதிக்கையை அங்கும் இங்கும் ஆட்டி உதறியது. ஆனால், எறும்பு தனது பிடியைத் தளர்த்தவில்லை. பக்கத்திலிருந்த மரத்தில் துதிக்கையை அடித்தவாறு பெரும் சத்தமிட்டுக் கத்தியது. பக்கத்தில் காணப்பட்ட மடு ஒன்றில் இருந்த நீரைத் தனது துதிக்கையால் உறிஞ்சி ஊதியது. அதற்கும் எறும்பு தனது பிடியை விட்டுக்கொடுக்கவில்லை. ஓடியோடிப் பிளிறியது. விழுந்து மணலிற் புரண்டு எழுந்தது. ஆனால், எதனாலும் யானையால் எறும்பின் பிடியில் இருந்து விடுபட்டுக்கொள்ள முடியவில்லை.

சோர்வடைந்த யானை எறும்பிடம் மன்றாடியது. "எறும்பே, தயவுசெய்து உனது பிடியைத் தளர்த்திவிடு, என்னால் வேதனை தாங்கமுடியவில்லை. இனிமேல் எவருக்கும் அநியாயங்கள் செய்யமாட்டேன். சாந்தமுடன் வாழ்வேன். என்னை நம்பு" என மன்றாடியது.

யானையின் பரிதாபநிலை கண்டு இரக்கமடைந்த எறும்பு, தனது பிடியைத் தளர்த்தி வெளியே வந்தது. "ஒவ்வொவருக்கும் ஒவ்வொரு சக்தி இருக்கும் என்பதை இனிமேலாவது தெரிந்து கொள்", எனக் கூறிவிட்டு எறும்பு ஓடிச்சென்று தனது கூட்டத்தாருடன் சேர்ந்துகொண்டது. யானை தனது பிழையை நினைத்து வருந்தியது.


♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. ஆசை அழிவைத் தரலாம்

ஒரு குளத்தில் இரண்டு மீன்கள் நண்பர்களாக இருந்துவந்தன. ஒன்று மஞ்சள் நிறம். மற்றையது வெள்ளை நிறம். தினமும் இரண்டு பேரும் சேர்ந்தே இரை தேடச் செல்வது வழக்கம். இரை தேடச் செல்பவர்கள் அக்குளத்தையும் ஒரு முறை சுற்றி வருவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தன.



வெள்ளை மீனை விட மஞ்சள் மீனுக்கு ஆசை அதிகம். எதனையும் தான் முந்திச்சென்று பெற்றுக் கொள்ளவே விரும்பும். எந்தப் பொருளைக் கண்டாலும் அதனை முகர்ந்து பார்ப் பதிலும் கடித்துப் பார்ப்பதிலும் முந்திக்கொண்டே இருக்கும். இரைகளைக் கண்டால் முன்பின் யோசிக்காது பிடித்துத் தின்னவே ஆசைப்படும். இதன் காரணமாக அந்த மஞ்சள் மீன் பல கஷ்டங்களை அனுபவித்ததும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மஞ்சள் மீனுடைய அவசரப்படும் செயல்களை விட்டுவிடும் படி வெள்ளை மீன் பலமுறை புத்தி கூறியும் அது தனது அவசரத் தன்மையை விட்டுவிடவில்லை. அதனால் வெள்ளை மீன் புத்தி சொல்வதை நிறுத்திக்கொண்டது.

ஒரு நாள் இரு மீன்களும் இரை தேடுவதற்காகப் புறப்பட்டுச் சென்றன. அப்போது அவர்கள் செல்லும் வழியில் இறால்கூனி ஒன்று மிதந்துக் கொண்டிருந்தது. அதனைக் கண்ட மஞ்சள் மீன் அதனைப் பிடித்து விழுங்குவதற்காக முந்திக்கொண்டு ஓடியது. இதனை அவதானித்த வெள்ளை மீன் மஞ்சள் மீனைப் பார்த்து "நண்பா, அவசரப்படாதே, அந்த இரை வழமைக்கு மாறான நிலையில் தெரிகிறது. சற்று ஆராய்ந்து பார்த்த பின் சாப்பிடலாம்" என்று தடுத்தது. ஆனால், மஞ்சள் மீன் தனது நண்பனின் வார்த்தைகளை காதில் வாங்கிக்கொள்ளாது கூனியைப் பிடித்து உண்பதற்காக விரைந்து சென்றது.

மீண்டும் வெள்ளை மீன், "நண்பா நான் சொல்வதைக் கொஞ்சம் கேள், பதறாதே நாம் இருவரும் சென்று அதனை ஆராய்ந்து பார்த்தபின் சாப்பிடலாம். பொறுமையாக நில்" எனக் கெஞ்சிக் கேட்டது.

உணவில் ஆசை கொண்ட மஞ்சள் மீன் தனது நண்பனின் அன்பான வார்த்தைகளை எல்லாம் தட்டிக் கழித்துவிட்டு விரைவாக ஓடிச்சென்று இறால்கூனியைக் கவ்வி இழுத்து விழுங்கியது. அவ்வளவுதான், இறால்கூனிக்குள் செருகப்பட்டிருந்த தூண்டில் அதனுடைய தொண்டையில் மாட்டிக்கொண்டது.

தொண்டையில் மாட்டிக் கொண்ட தூண்டலை கழற்றி விடுவதற்காக அந்த மீன் படாதபாடு பட்டது. அங்கும் இங்கும் ஓடியது. கதறிக்கதறி அழுதது. துள்ளிக் குதித்தது. எத்தனையோ முயற்சிகளைச் செய்தும் அதனால் தூண்டலைக் கழற்றிக்கொள்ளவே முடியவில்லை.

தனது நண்பன் படும் கஷ்டங்களைப் பார்த்து வெள்ளை மீன் கவலைப்பட்டது. நண்பனைக் காப்பாற்ற தன்னால் முடிந்த முயற்சிகளையெல்லாம் செய்தது. ஒன்றுமே பலிக்கவில்லை. கடைசியாக அந்தக் கூனி தொங்கிக்கொண்டிருந்த தங்கூசைக்கூடக் கடித்துப் பார்த்தது. அதனால் முடியவில்லை. அவ்வேளை தூண்டிலைப் போட்டுக்கொண்டிருந்தவன் தங்கூசை மேலே இழுத்து அந்த மீனைப் பிடித்துக்கொண்டான்.

தான் சொன்ன புத்திமதிகளைக் கேளாது ஆசையினால் ஆபத்தில் மாட்டிக்கொண்ட தனது நண்பனை நினைத்து அழுதவாறு வெள்ளை மீன் தன்னுடைய இருப்பிடத்தை நாடிச்சென்றது.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பொறாமை கொண்ட குமுதா

ஒரு கிராமப்புற பாடசாலையில் குமுதா, அமுதா என இரண்டு மாணவிகள் கல்வி கற்றுவந்தனர். குமுதா பணக்கார வீட்டுப்பிள்ளை. அமுதா மிகவும் ஏழை மாணவி. இருவரும் ஒரே வகுப்பில் கல்வி பயின்றனர். குமுதாவை விட அமுதா மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள். இது குமுதாவுக்கு எரிச்சலாக இருந்தது. அத்தோடு வகுப்பு ஆசிரியை முதல் ஏனைய ஆசிரியர்களும் அமுதாவுடன் பிரியமாக இருந்தார்கள். இது குமுதாவுக்கு அமுதா மீது பொறாமை ஏற்படச் செய்தது. இதன் காரணமாக குமுதா அமுதாவுக்குப் பல தொல்லைகளைக் கொடுத்து வந்தாள். ஆனால், அமுதா எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக்கொள்வாள். கொஞ்சம்கூட குமுதாவை எதிர்த்தும் பேசமாட்டாள்.

ஒருமுறை வருடப்பிறப்புக்குக்காக அமுதா தான் சேகரித்து வைத்திருந்த பணத்தை அண்ணனிடம் கொடுத்து ஒரு அழகான சப்பாத்துச்சோடி வாங்கினாள். அதனை அமுதா மிக்க மகிழ்வோடு அணிந்துகொள்வாள்.

பாடசாலை விடுமுறை கழித்து பாடசாலை தொடங்கியதும் அமுதா தான் வாங்கி இருந்த புதிய அழகான சப்பாத்துக்களை அணிந்துகொண்டு பாடசாலைக்குச் சென்றாள். அதே வகையான ஒரு சப்பாத்துச் சோடியையே குமுதாவும் அணிந்து வந்திருந்தாள்.

தனது சப்பாத்துக்களைப் போல் அமுதா அணிந்து வந்திருப்பதைக் கண்ட குமுதாவுக்கு தாங்கொண்ணா ஆத்திரமும் பொறாமையும் ஏற்பட்டது. ஆனால், குமுதா அவற்றை வெளியே காட்டிக்கொள்ளாமல் இருந்தாள்.

அடுத்தநாள் வகுப்பு மாணவர்கள் பூசை செய்வதற்காக அருகில் இருந்த கோயிலுக்குச் செல்லும்போது அமுதா தனது சப்பாத்துக்களை கழற்றி வகுப்பினுள் வைத்துவிட்டு சென்றாள். இதனை அவதானித்துக் கொண்டிருந்த குமுதா மாணவர்கள் அனைவரும் வெளியே செல்லும்வரை காத்திருந்தாள். அனைவரும் சென்றபின் தன்னிடம் இருந்த பிளேட்கத்தியினால் அமுதாவின் சப்பாத்துக்களில் உள்ள பட்டிகளை வெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துண்டாக்கி விட்டுப் பின்னால் சென்றாள்.

பூசை முடிவுற்று வகுப்புக்குத் திரும்பிய அமுதா சப்பாத்துக்கள் வெட்டப்பட்டுள்ளதைக் கண்டு வேதனையுடன் அழுதாள். வகுப்பு ஆசிரியை யினால் எத்தனையோ முயற்சிகள்எடுத்தும் வெட்டிய வரை கண்டுபிடிக்க முடியாது போய்விட்டது.

வீட்டுக்கு வந்த அமுதா தனது தாயிடம் சப்பாத்துக்கள் வெட்டப் பட்டுள்ளதைக் காட்டி விம்மி விம்மி அழுதாள். தாய் அவளை தேற்றியதோடு ஒரு புதிய சப்பாத்துச்சோடி வாங்கித் தருவதாகக் கூறி ஆறுதல்படுத்தினார்.

அடுத்தகிழமை குமுதா ஒரு குதியுயர்ந்த அழகான சப்பாத்துச்சோடி ஒன்றை அணிந்து பாடசாலைக்கு வந்திருந்தாள். அவள் மிகவும் பெருமை யுடன் அங்குமிங்கும் நடந்து திரிந்தாள். என்றாலும் அவளால் அச்சப்பாத்துக்களை அணிந்துகொண்டு சரியான முறையில் நடக்க முடியாது கஷ்டப்படுவது தெரிந்தது.

பாடசாலை முடிவடைந்தவேளை மாணவர்கள் மேல் மாடியில் இருந்து வேகமாக இறங்கிக்கொண்டிருந்தனர். குமுதாவும் கீழ் இறங்கிவந்துகொண்டி ருந்தாள். மாணவர்களின் நெரிசலால் தள்ளுண்ட குமுதா சறுக்கி விழுந்து படிகளில் புரண்டவாறு தரையில் வந்து விழுந்தாள். எழுந்துகொள்ள முடியாது சத்தமிட்டு அழுத குமுதாவைப் பின்னால் வந்துகொண்டிருந்த அமுதா ஓடிவந்து தாங்கி நிறுத்த முயற்சித்தாள். ஆனால், குமுதாவால் எழுந்து நிற்க முடியாதபடி முழங்கால் சில்லொன்று உடைந்திருந்தது. அமுதாவும் ஏனைய சில மாணவிகளும் ஆசிரியைகளின் உதவியுடன் குமுதாவைக் கொண்டு வந்து அவளுடைய வீட்டில் சேர்த்தனர்.

ஆபத்துவேளையில் ஓடோடிவந்து உதவி செய்த அமுதாவின் நல்ல தன்மையைக் கண்டு, தான் அவளுக்குச் செய்த துரோகங்களை நினைத்து நினைத்து வேதனைப்பட்டாள் குமுதா.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சிங்கத்தின் நேர்மை

ஒரு காட்டில் ஒரு சிங்கம் வசித்துவந்தது. அது அக்காட்டில் வாழ்ந்த மிருகங்களுக்கும் பிராணிகளுக்கும் அரசனாக இருந்தது. அது எல்லா உயிரினங்களுடனும் அன்பாகப் பழகியதால் அனைத்து உயிரினங்களும் அந்தச் சிங்கத்திற்கு நல்ல மதிப்பளித்து மரியாதை செய்தன.

ஒரு நாள் சிங்கம் தனது பிறந்த நாளைக் கொண்டாட எல்லா மிருகங்களையும் பிராணிகளையும் தனது இருப்பிடத்திற்கு அழைத்தது. பிறந்த நாளன்று சிங்கத்தை மகிழ்விப்பதாக மிருகங்களும் பிராணிகளும் தத்தமது வசதிக்கேற்ப பரிசில் பொருட்களைக் கொண்டுசென்றன.

எலியார் கேக் துண்டொன்றைக் கொண்டுவந்தார். யானையார் பெரியதொரு கரும்புக் கட்டைத் தூக்கி வந்தார். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகைப் பொருட்களைக் கொண்டுவந்து சிங்கத்தின் முன் வைத்தனர்.


சிங்கத்தார் அவரவர் உண்ணக்கூடிய வகையில் நல்ல விருந்தளித்து மகிழ்வித்தார். எல்லாரும் உண்டு முடிந்தபின் கிளியார் சிங்கத்தை வாழ்த்தி அழகான ஒரு பாடல் இசைத்தார். குரங்காரும் யானையாரும் பாட்டுக்கு ஏற்ப ஆடினர். அணிலார் பாய்ந்து புரண்டு சில விளையாட்டுக்களைக் காட்டினார். இவ்வாறு வந்திருந்த அனைவரும் விதவிதமாக ஆடியும் பாடியும் மகிழ்வித்தபின்னர் எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்தபின் எல்லாரும் எழுந்து தாம்தாம் கொண்டுவந்திருந்த கேக் துண்டை சிங்கத்தாரிடம் நீட்டினர். சிங்கத்தார் அதனைக் கை நீட்டி வாங்காது. “இது உனக்கு எவ்வாறு கிடைத்தது?” என வினவினார்.

எலியார் தான் நேற்றிரவு ஒரு வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். இவ்வாறே பரிசில்கள் கொண்டுவந்த அனைவரிடமும் வினவினார்.

அணிலாரும் கிளியாரும் தாமும் ஒரு வீட்டுத்தோட்டத்திலிருந்து பறித்துக்கொண்டு வந்ததாகக் கூறினார்கள். அதேபோன்றே குரங்காரும் யானையாரும் தாமும் மற்றவர்களுக்குச் சொந்தமான தோட்டங்களிலிருந்தே கொண்டுவந்ததாகச் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நேரம் ஒரு புலியார் ஒரு மானைக் கவ்வி இழுத்துக் கொண்டு இளைக்க இளைக்க அவ்விடத்தை நோக்கி வந்தார்.

இதனைக் கண்ணுற்ற சிங்கத்தார் தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து சென்று புலியாரை வரவேற்று அவருடைய தோளைத் தட்டி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார். அத்தோடு அவர் கொண்டுவந்த மானை மிக்க சந்தோசத்துடன் வாங்கிக் கொண்டார்.

இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த பிராணிகளுக்கும் மிருகங்களுக்கும் பெரிய ஆச்சர்யமாக இருந்ததோடு தாம் கொண்டுவந்த பரிசில்களைச் சிங்கத்தார் வாங்காதது பெரும் குறையாகவும் தென்பட்டது. என்றாலும் யாருமே இதுபற்றி வாய்திறக்கவில்லை.

மானைப் பெற்றுக்கொண்ட சிங்கத்தார் ஏனையவர்களைப் பார்த்து, “நான் நீங்கள் கொண்டுவந்திருந்த பரிசில்கள் வாங்காததையிட்டு நீங்கள் மனம் வருந்தக்கூடும். ஆனால், நீங்கள் பரிசில்களாகக் கொண்டுவந்த அனைத்துப் பொருட்களும் உங்கள் உழைப்பினாற் கிடைத்த சொந்தப் பொருட்கள் அல்ல. அவை மற்றவர்களுக்குரிய சொத்துக்களாகும். அவற்றை நீங்கள் திருடிக்கொண்டு வந்துள்ளீர்கள். மற்றவர்களுடைய பொருட்களை அவர்கள் அறியாவண்ணம் எடுப்பது பெருங்குற்றமும் பாவமுமாகும். ஆகவே, நீங்கள் கொண்டுவந்த பொருட்களை எடுத்துச்சென்று உரியவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். இதுவே நீங்கள் எனக்குத் தரும் மேலான பரிசில்களாக கருதுவேன். புலியார் மட்டுமே தனது சொந்த முயற்சியினால் வேட்டையாடிக் கொண்டுவந்துள்ளார். இதுவே உண்மையான உழைப்பாகும். அத்தோடு சிறந்த பரிசிலுமாகும்” என ஒரு சிறந்த பிரசங்கத்தை ஆற்றி மற்றவர்களுடைய தவறை உணரச் செய்தார். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த அனைவரும் உண்மையை உணர்ந்து தத்தமது செயல்களுக்காக மனம் வருந்தினர்.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. உயர்வான நட்பு

அன்று பெருநாள் தினம். எல்லோரும் புதிய புதிய ஆடைகள் அணிந்துகொண்டு பள்ளிவாயலை நோக்கிச் சென்றவண்ணம் இருந்தனர். சிறுவர்கள் அழகான ஆடைகளை அணிந்துகொண்டு பட்டாசுகளைக் கொளுத்தி மகிழ்ந்து விளையாடினர்.

அன்வரும் தனது புதிய ஆடைகளை அணிந்துகொண்டு பள்ளிவாசலுக்குச் செல்லும் வழியில் தனது பாடசாலை நண்பன் பாறுக்கையும் அழைத்துச் செல்ல அவனது வீட்டுக்குச் சென்றான். பாறுக் அவர்கள் குடியிருந்த குடிசைக்கு முன்னால் ஒரு பழைய சாரத்தை உடுத்திக் கொண்டு குந்தியிருந்தான். தனது நண்பன் அன்வர் புதிய ஆடை அணிந்தவனாக தன்னை தேடி வருவதைக் கண்ட பாறுக் ஓடிச்சென்று அவனை வரவேற்றான்.

"பாறுக் பள்ளிவாயலில் தொழுகை நடைபெறுவதற்கு நேரமாகிறது. நீ உனது புதிய உடைகளை அணிந்துகொண்டு வா, இருவரும் போய் தொழுதுவிட்டு வருவோம்' என்றான் அன்வர்.

இதைக் கேட்ட பாறுக் "எனக்கு பள்ளிவாயலுக்குப் போக ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால், வாப்பாவிடம் காசு இல்லாததால் புதிய உடுப்புக்கள் வாங்கவில்லை, நீ போய் தொழுதுவிட்டு வா, இரண்டு பேரும் சேர்ந்து விளையாடுவோம்" எனத் துக்கத்துடன் சொன்னான்.

நண்பனின் நிலைமையை எண்ணி அன்வர் மிகவும் துக்கப்பட்டான். உடனே ஒன்றுமே சொல்லாது அங்கிருந்து வெளியேறினான். வெளியில் வந்த அன்வர் பள்ளிவாயலுக்குச் செல்லாது நேராக தனது வீட்டை நோக்கி நடந்தான்.

அங்கே அவனது அலுமாரியில் அவனுடைய மாமா அவனுக்காக வாங்கிக் கொடுத்த புதிய ஆடையொன்று இருந்தது. அதனை எடுத்துக்கொண்டு நண்பனின் வீட்டை நோக்கி ஓடிவந்தான். தான் கொண்டுவந்திருந்த புதிய உடுப்பைத் தனது நண்பனிடம் கொடுத்து, "இந்த உடுப்பை அணிந்துகொண்டு விரைவாக வா" என அவசரப்படுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாறுக் முதலில் தயங்கினாலும் நண்பனின் வற்புறுத்தலுக்கு இசைந்து அணிந்துகொண்டான். இருவரும் மிக்க மகிழ்ச்சியோடு பள்ளி வாயலை நோக்கி சென்றனர். போகும் வழியில் பாறுக்கின் மனம் அன்வருக்கு நன்றி சொல்லிக்கொண்டே இருந்தது.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தன்வினை தன்னைச் சுடும்

ஒரு கிராமத்திற்குச் சற்றுத் தள்ளி ஒரு காடு இருந்தது. அக்காட்டில் ஒரு நரி வசித்துவந்தது. அந்த நரி ஒரு நாள் தற்செயலாகப் பக்கத்தில் இருந்த கிராமத்திற்குச் செல்ல நேர்ந்தது. அக்கிராமத்தில் வாழ்ந்த மக்கள் சேனைப்பயிர் செய்திருந்தார்கள். ஒரு சேனைக்கு ஒரு விவசாயி கோழிப்பண்ணை ஒன்றையும் வைத்திருந்தான். அப்பண்ணையில் வெள்ளை, கறுப்பு நிற கோழிகள் நன்கு வளர்ந்து கொழுத்துக் காணப்பட்டன. இவற்றைக் கண்ட நரிக்கு வாயில் சலம் ஊறியது. அவற்றில் ஒரு கோழியைப் பிடித்து உண்பதற்கு ஆசைப்பட்டது. ஆனால், சேனையை வளைத்துப் பலமான வேலி போடப்பட்டிருந்தது. இதனால் நரிக்கு தனது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாது போய்விட்டது. அது பலமுறை உள்ளே செல்ல முயற்சிகள் எடுத்தும் முடியவில்லை. கடைசியில் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுகொண்டிருந்த நரி வழியில் ஒரு மாடு மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டது.

மாட்டைக் கண்டதும் நரியின் மனதில் ஒரு யோசனை ஏற்பட்டது. மாட்டை கொண்டு அந்தச் சேனையின் வேலியை உடைத்துவிட்டால் இலகுவாக கோழிகளைப் பிடித்துக்கொள்ளலாம் என்பதே அந்த யோசனையாகும். உடனே நரி மாட்டுக்குச் சமீபமாகச் சென்று மாட்டின் முன்னால் அமர்ந்து கொண்டு மாட்டுக்கு கேட்கும் வண்ணம் பலமாகச் சத்தமிட்டு அழுதது.

புல் மேய்ந்து கொண்டிருந்த மாடு நரியின் அழுகைச் சத்தம் கேட்டுத் தலையை உயர்த்திப் பார்த்தது. தனக்கு முன்னால் ஒரு நரி அழுதுகொண்டிருப்பதைக் கண்டது. உடனே மாடு நரியைப் பார்த்து, "ஏன் நரியாரே அழுகின்றீர்," என்று கேட்டது.

"ஒன்றுமில்லை பெரியவரே, நீங்கள் இந்த தள்ளாத வயதில் இப்படி காய்ந்த புல்லை மேய்ந்து கஷ்டப்படுவதைக் கண்டதும் என்னால் துன்பத்தைத் தாங்க முடியவில்லை, அதனால்தான் வாய்விட்டு அழுகின்றேன்",என்றது.

"அதற்காக நாம் என்ன செய்வது? உள்ளதைக்கொண்டு வாழவேண்டியதுதான். உனது அன்புக்கு நன்றி", எனக்கூறிவிட்டு மாடு மீண்டும் மேய்வதில் ஈடுபட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக்கேட்ட நரி, "உங்களுக்கென்ன பைத்தியமா? நான் இப்போதுதான் பக்கத்துக் கிராமத்திற்குச் சென்று வந்தேன். அங்குள்ளவர்கள் எத்தனை அழகாகச் சேனைப்பயிர் செய்துள்ளார்கள் தெரியுமா? நீங்கள் என்னோடு வரச் சம்மதித்தால் நான் கூட்டிப்போவேன்" என ஆசைவார்த்தைகளைக் கூறியது. அந்த ஆசை வார்த்தைகளில் மயங்கிய மாடு உடனே போவதற்கு ஆயத்தமானது.

தனது தந்திரம் பலித்து விட்டதைக்கண்ட நரி, "அவசரப்படாதீர்கள், இப்போது இருள் சூழ்வதால் அங்கு செல்வது புத்திசாலித்தனமாகாது. ஏனென்றால் இரவு வேளையில் சேனையில் காவலாளிகள் இருப்பார்கள். நாம் சென்றால், சிலவேளை ஆபத்தில் மாட்டிக்கொள்ளலாம். எனவே, நாளைக் காலையிற் செல்வோம்" என்றது.

நரியின் தந்திரத்தை அறியாத மாடு அதற்கு சம்மதம் தெரிவித்தது. நரி மிக்க மகிழ்ச்சியோடு இருப்பிடத்தை நோக்கி நகர்ந்தது.

அடுத்தநாள் காலை மாடு நரியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தது. நரியும் நேரத்துக்கு வந்துவிட்டது. இருவரும் சேர்ந்து கிராமத்தை நோக்கிச் சென்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தை அடைந்த மாட்டிற்கு அங்கே செழித்து வளர்ந்திருந்த புல்லைக்காட்டிலும் சேனைக்குள் செழித்து வளர்ந்திருந்த மரவள்ளிச் செடிகள் ஆசையை ஊட்டின. அவற்றை வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தது. இதனைக் கண்ட நரி, "பார்த்தீர்களா? எத்தனை செழிப்பாக செடிகள் வளர்ந்துள்ளன. நீங்கள் முயற்சி செய்து வேலியை உடைத்துவிட்டால் இருவருக்கும் உள்ளே செல்வது இலகுவாகிவிடும்" என்று ஆசையை ஊட்டியது.

ஆசை கொண்ட மாடு வேலியை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. ஆனால், வேலி இலேசில் உடைப்படக்கூடியதாக இருக்க வில்லை. பலமுறை முயன்றும் முடியாது போகவே, மாடு அந்த முயற்சியை கைவிட்டது. சேனையை சூழக் காணப்பட்ட புல்லை மேயத்தொடங்கியது. இதைப் பார்த்துக்கொண்டிருந்த நரிக்கு வேறு ஒரு யோசனை தட்டுப்பட்டது. எப்படியாவது உள்ளே செல்வதற்கு ஆசை கொண்ட நரி மாட்டின் பக்கத்திற் போய், "பெரியவரே, நீங்கள் வேலியின் பக்கத்தில் வந்து நின்று கொள்ளுங்கள். நான் உங்கள் முதுகிற் பாய்ந்து உள்ளே குதிக்கின்றேன். பின்பு நான் மெல்ல சென்று வழியை திறந்து விடுகிறேன் அதன்பின் நீங்கள் இலேசாக உள்ளே வரலாம்" என்றது.

நரியின் யோசனை மாட்டிற்கு நன்றாகப்பட்டதால் மாடு சம்மதித்தது. மாட்டின் மேல் பாய்ந்து உள்ளே குதித்த நரி நேராகக் கோழிப் பண்ணைக்குள் புகுந்து கோழியைப் பிடிக்க முடியாதபடி இருந்தது.

இதற்கிடையில் மாடு சேனையைச் சூழ்ந்து வளர்ந்திருந்த புல்லை உண்டு வயிற்றை நிரப்பிக்கொண்டது.

நரி பல தந்திரங்களைப் பாவித்தும் அதனால் பண்ணையை உடைத்துக் கொண்டு உள்ளே செல்ல முடியாதிருந்ததோடு அதனால் வெளியே வரவும் முடியாது போய்விட்டது. நீண்ட நேரமாகியும் நரி வெளியே வராததைக் கண்ட மாடு ஆத்திரத்தோடு தனது இருப்பிடம் நோக்கி நடந்தது.

இராக்காவலுக்காகச் சேனைக்கு வந்தவர்களின் கண்களில் நரி ஒன்று கோழிப்பண்ணையைச் சுற்றிச் சுற்றி வருவதுபட்டது. உடனே எல்லோரும் தடிகளை எடுத்துக் கொண்டு வந்து நரியை துரத்தி அடித்துக்கொன்றனர்.

☘ ☘ ☘



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. நேர்மையின் சிறப்பு

பாடசாலையில் மாணவர்கள் விதவிதமான சப்பாத்துக்களை அணிந்து வரும்போது காலிதீன் தனக்கொரு சப்பாத்துச்சோடி இல்லயே என கவலைப்படுவான். அதன்காரணமாக அவன் தனக்குக் கிடைக்கும் பணத்தை மிகப் பத்திரமாகச் சப்பாத்துக்கள் வாங்கும் நோக்கில் சேமித்துவந்தான்.

ஒரு நாள் அவனது வீட்டுக்கு சற்றுத் தொலைவிலுள்ள கடை ஒன்றில் பலவிதமான அழகிய சப்பாத்துக்கள் இருப்பதைக் கண்டான். உடனே கடையினுள் சென்று தனக்குப் பிடித்தமான ஒரு சப்பாத்துச் சோடியின் விலையை கேட்டான். கடைக்காரன் அச்சோடி சப்பாத்திற்கு இருநூறு ரூபாய் விலை சொன்னான். உடனே வீட்டுக்கு ஓடி வந்து காலதீன் தன்னிடமிருந்த சேமிப்புப் பணத்தை எண்ணிப்பார்த்தான். எண்பது ரூபாய் மட்டுமே. இருந்தது. அது சப்பாத்து வாங்க போதியதாக இருக்கவில்லை. அதனால் அவன் மேலும் பணத்தைச் சேமிக்க முடிவுசெய்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தநாள் காலிதீன் பாடசாலை விட்டு வீட்டுக்கு வரும் வழியில் கடதாசியினாற் சுற்றிய பொதி ஒன்று கிடப்பதைக் கண்டான். அதனை எடுத்துக் கொண்டுவந்து தன் தாயிடம் கொடுத்தான். தாய் அதனைப் பிரித்துப் பார்த்தார். உள்ளே பல நூறு ரூபாய்கள் கட்டாக கட்டப்பட்டு இருந்தன. இதனைக் கண்டதும் காலிதீன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். தனக்குச் சப்பாத்துக்கள் வாங்கப் பணம் கிடைத்து விட்டதாக தாயிடம் கூறினான்.

அந்நேரம் அவர்களது வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த பள்ளிவாயலில், வங்கிக்குச் சென்ற ஒருவரின் பணப்பொதி வழியிற் தவறிப்போய்விட்டதாகவும் அதனைக் கண்டெடுத்தவர் பள்ளிவாயலில் கொண்டுவந்து ஒப்படைக்குமாறும் ஒலிபரப்பி மூலம் அறிவித்தார்கள். இந்த ஒலிபரப்பைக் கேட்ட காலிதீன் பணத்தை ஒப்படைப்பதா? இல்லையா? எனத் தடுமாறினான்.

அவனது தடுமாற்றத்தை அவதானித்த தாய் "மகனே, இது நமக்குரிய பணமல்ல, அதனைக் கொண்டு நாம் சப்பாத்துக்கள் வாங்கி அணிவது பெரும் பாவமாகும். ஆகவே, அதனைக் கொண்டுபொய் பள்ளிவாயலில் ஒப்படைத்துவிடு, இறைவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கின்றான்" எனக்கூறி அவனைப் பொதியுடன் பள்ளிவாயலுக்கு அனுப்பி வைத்தார்.

தாய் சொல்லுவது உண்மை என்பதைப் புரிந்துக்கொண்ட காலிதீன் ஓடோடிச் சென்று பணத்தைப் பள்ளிவாயலில் ஒப்படைத்தான்.

அவனது நேர்மையைக் கண்ட பணத்தின் சொந்தக்காரர் அவனை நன்கு பாரட்டியதோடு ஓர் ஆயிரம் ரூபாவை அவ

னுக்குப் பரிசாகக் கொடுத்தார். காலிதீன் பரிசாகக் கிடைத்த பணத்தைக் கொண்டு இரண்டுசோடிச் சப்பாத்துக்கள் வாங்கி அணிந்து மகிழ்ந்தான்.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. சமயோசித புத்தி

ஒரு காட்டுக்கு அருகாமையில் ஒரு விவசாயி குடிசை அமைத்து தனது மனைவி மக்களுடன் வாழ்ந்து வந்தான். அவன் பயிர் தொழில் செய்து காலத்தை கடத்தினான். அவனுக்கு உதவியாக அவனது மனைவியும் மக்களும் இருந்தனர். பயிர் தொழிலோடு ஆடு, மாடு, கோழி ஆகியவற்றையும் வளர்த்தனர்.

அவர்கள் வளர்த்து வந்த கோழிகளுக்குள் அழகான பெருத்த சேவல் ஒன்றும் இருந்தது. அது ஒவ்வொரு நாளும் சாம வேளையில் இனிமையாகக் கூவி அவர்களை எழுப்பிவிடும். அதனுடைய இனிமையான குரலும் அழகும் பக்கத்துக்காட்டில் வசித்துவந்த ஒரு நரிக்கு அச்சேவல் மேல் ஆசைக்கொள்ள வைத்தது. அதன் காரணமாக அந்த நரி அச்சேவலை எப்படியாவது பிடித்து உண்பதற்கு பல முறை முயற்சி செய்தது. ஆனால், அதன் முயற்சிகள் யாவும் பயனளிக்கவில்லை. கடைசியாக அது சேவலைப் பிடிப்பதற்கு ஒரு தந்திரத்தைக் கையாண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரி பக்கத்து வயலுக்குச் சென்று அங்கே குவித்து வைக்கப்பட்டிருந்த நெற்குவியலில் இருந்து சிறிதளவு நெல்லை எடுத்து வந்தது. கொண்டு வந்த நெல்லை அந்தச் சேவல் வழமையாகக் கிளறி தீனி தேடும் குப்பை குவியலுக்குப் பக்கத்திலிருந்து காடுவரையும் தூவி விட்டு அருகே இருந்த பற்றைக்குள் பதுங்கி இருந்தது.

நரியின் தந்திரத்தை அறியாத சேவல் தான் வழமையாக உணவு தேடியுண்ணும் குப்பை மேட்டிற்கு வந்தது. அங்கே நெல் கொட்டுண்டு கிடப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியோடு பொறுக்கி உண்ணத் தொடங்கியது. மெல்ல மெல்ல பொறுக்கிக்கொண்டு காட்டின் ஓரம் வரை வந்துவிட்டது. சேவல் வரும்வரைக் காத்துக்கொண்டிருந்த நரி லபக்கெனப் பாய்ந்து சேவலைப் பிடித்துக்கொண்டது.

நரியுடைய வாயில் அகப்பட்ட சேவல் தப்பிக்கொள்வதற்காக பெரும் முயற்சி செய்தது ஆனால், அதன் முயற்சி பலன்தரவில்லை. என்றாலும் நரியிடம் இருந்து எப்படி தப்பிச் செல்வது என்பதையே சேவல் தீவிரமாக யோசித்தது. கடைசியாக அதற்கு ஒரு நல்ல யோசனை தட்டுப்பட்டது. உடனே சேவல், நரி எதிர்பாராத வகையில் "கலகல" என சிரிக்கத் தொடங்கியது.

தன்னிடம் அகப்பட்டுக்கொண்ட சேவல் துக்கப்படாது 'கலகல' வெனச் சிரிப்பது நரிக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. உடனே நரி சேவலைச் பார்த்து "சாகப்போகும் நீ ஏன் துக்கப்படாது சத்தமிட்டுச் சிரிக்கின்றாய்?" என்று கேட்டது.

"சாவு உன்னை நெருங்கிவிட்டால் நீ கலகலப்பாகச் சந்தோஷத்துடன் சத்தமிட்டுச் சிரிக்கவேண்டும். அத்தோடு மூன்றுமுறை உனது இறக்கைகளைத் தட்டி சத்தமிட்டு அழகாக கூவ வேண்டும். என எனது தாய் சொல்லியுள்ளார். அதனை நினைத்தே சிரிக்கின்றேன். நீ எனக்குச் சற்று அவகாசம் கொடுத்தால் எனது தாய் கேட்டுக்கொண்டபடி இறக்கையை அடித்துக் கூவிக்கொள்வேன். எனது தாயின் சொற்களையும் மதித்ததாகப்போகும், அதன் பிறகு நீ என்னை உன் இஷ்டப்படி உண்ணலாம்" என்று சேவல் மிகவும் பணிவோடு கூறியது.

"சரி சரி, சாகப்போகும் நீ உன் தாயின் சொல்லை தட்டிக்கழிக்காது உன் இஷ்டப்படி கூவிக்கொள்", என்று நரி சேவலை தனது பிடியில் இருந்து விடுவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நரியாரே, தாய் சொல்லை மதித்த உங்களுக்கு எனது நன்றி", எனக்கூறியவாறு நரியை விட்டும் சற்றுத்தள்ளி நின்று இறக்கைகள் இரண்டையும் விலாவில் அடித்து தலையை உயர்த்தி கூவுவது போன்று பாசாங்கு செய்த சேவல் திடீரென இறக்கையை அடித்தவாறு மேல் நோக்கி பறந்து ஒரு மரக்கிளையில் தாவிக்கொண்டது.

எதிர்பாராத இச்செயலால் அதிர்ச்சியடைந்த நரி ஆத்திரத்துடன் சேவலை நோக்கிப் பாய்ந்தது. ஆனால், நரியினால் சேவலை எட்ட முடியவில்லை. ஏமாற்றத்தோடு சேவலையே பார்த்துக்கொண்டிருந்த நரியைப் பார்த்து "புத்தி இருந்தால் பிழைத்துக்கொள்ளலாம்" எனக் கூறியவாறு ஒவ்வொரு மரமாகத் தாவித்தாவி தன் வீட்டை அடைந்தது. நரி வெட்கத்துடன் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு காட்டிற்குள் சென்றது.


♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. தெருநாய்

அகமது பாடசாலையில் கல்வி கற்கும் ஒரு மாணவன். அவன் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குச் செல்லும்போது, தெருவோரத்தில் மரத்தடியில் படுத்திருக்கும் ஒரு சின்ன நாய்க்குட்டிக்குத் தான் கொண்டு செல்லும் உணவில் சிறிதளவைக் கொடுப்பது வழக்கமாகும். அதனால் அந்த நாய்க்குட்டி அவனைக் கண்டதும் தனது வாலை ஆட்டி தனது நன்றியையும் அன்பையும் தெரிவிக்கும்.



அந்த அழகிய நாய்க்குட்டியைத் தனது வீட்டிற்கு கொண்டு வந்து வைத்துக்கொள்ள அகமது மிகவும் விரும்பினான். ஆனால், அவனின் தாய் அதனை விரும்பவில்லை.

அன்று வழமை போல் அவன் பாடசாலைக்குச் செல்லும் போது அந்த நாய்க்குட்டி காலையிற் பெய்த பெரு மழையில் நனைந்து நடுங்கிக்கொண்டிருந்தது. அதை கண்ட அகமது மிக்க துக்கமடைந்தான். அவன் கொடுத்த உணவையும் தின்னாது அவனை பரிதாபமாகப் பார்த்தபடி அந்த நாய்க்குட்டி வாலை மட்டும் ஆட்டியது. அகமது அதை தூக்கி வெய்யிலில் வைத்துவிட்டுப் பாடசாலையை நோக்கிச் சென்றான்.

பாடசாலையில் இருக்கும்போதெல்லாம் அந்த நாய்க்குட்டியைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தான். பாடசாலை விட்டதும் அவன் ஓடோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அந்த நாய்க்குட்டியைப் பார்த்தான். அது வெய்யிலிற் காய்ந்து பழையபடி அழகாக இருந்தது. அவனைக் கண்டதும் வாலை ஆட்டிக்கொண்டு அவன் அருகே ஓடிவந்தது. அகமது அதனைத் தூக்கி எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டுக்குக் கொண்டு செல்வதை அம்மா விரும்பமாட்டார் என்பதனால் அதனை அவர்களது தோட்டத்தில் இருந்த குடிசைக்குள் வைத்துவிட்டுச் சென்றான். எவரும் அறியாதபடி வேளாவேளைக்கு அதற்கு உணவு கொண்டுவந்து கொடுத்தான். எப்படியோ அகமது நாய்க்குட்டி ஒன்றை தோட்டத்ததில் உள்ள குடிசையில் வைத்து வளர்ப்பது அவனது அம்மாவுக்கு தெரியவந்தது. தாய் அகமதை அழைத்து விசாரித்தார்.

அது நல்ல அழகான நாய்க்குட்டி அம்மா, அதை யாரும் கவனிப்பதில்லை, நான்தான் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு எடுத்துச் செல்லும் உணவில் அதற்குக் கொடுப்பது வழக்கம். அது மழையில் நனைந்து கஷ்டப்பட்டதாலே எடுத்து வந்தேன்" என உண்மையைச் சொன்னான். தனது மகனுக்கு அந்த நாய்க்குட்டி மீது இருந்த இரக்கத்தைக் கண்டு அதை தோட்டத்தில் வைத்துக்கொள்ள அவனது தாய் சம்மதித்தார். அவன் ஒவ்வொரு நாளும் அந்த நாய்க்குட்டிக்கு நல்ல சாப்பாடுகள் கொடுத்து வளர்த்து வந்தான். அந்த நாய்க்குட்டி வளர்த்து அவர்களது தோட்டத்தையும் வீட்டையும் காவல் செய்து வந்தது.

ஒரு நாள் அகமது பெற்றோர் ஒரு திருமணத்திற்காக வெளியூர் சென்றிருந்தனர். அவர்களுடன் அகமது சென்றிருந்தான். இதனை எப்படியோ அறிந்த சில திருடர்கள் அன்றிரவு அகமது வீட்டை உடைத்து களவாட முற்பட்டார்கள். இதனை அவதானித்துக் கொண்டிருந்த நாய் மெல்ல மெல்ல பதுங்கி வந்து திருடர்கள் மேல் பாய்ந்து பாய்ந்து கடிக்கத் தொடங்கியது. நாயின் எதிர்பாராத தாக்குதலால் காயமுற்ற திருடர்கள் ஓடத் தொடங்கினார்கள். திருடர்களில் ஒருவன் மட்டும் எதிர்த்து நின்று நாயைத் தாக்கினான்.

நாய் காயமடைந்தாலும் சத்தமிட்டுக் குரைத்தபடி அவன் மீது பாய்ந்து கடித்தது. நாயின் பெரும் சத்தத்தைக் கேட்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் ஓடிவந்தனர். இதனைக் கண்ட திருடன் மற்றவர்கள் ஓடிய திசையை நோக்கி ஓடினான்.

அடுத்தநாள் வீட்டுக்கு வந்த அகமதும் பெற்றோரும் நடந்தவற்றை அயலவர்கள் மூலம் அறிந்து அந்த நாயை மெச்சிப் புகழ்ந்ததோடு அதனை அன்போடு பாதுகாத்து வந்தனர்.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. நற்செயல் தந்த பரிசு

அமீனும் சலீமும் இணைபிரியாத நண்பர்கள். இருவரும் அடுத்தடுத்த வீடுகளில் வசித்துவந்ததால் இருவரும் ஒன்றாகச் சேர்ந்தே பாடசாலைக்குச் செல்வார்கள். ஒன்றாகவே விளையாடுவார்கள். அமீன் பிறருக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுமோ அவற்றை செய்துக் கொடுப்பதில் விருப்பமுள்ளவன். சலீமும் நல்ல குணமுடையவனாக இருந்தாலும் மற்றவருக்கு உதவி ஒத்தாசை செய்வதில் சற்று பொடுபோக்குத்தனமானவன். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பான்.

ஒரு நாள் இருவரும் பாடசாலைக்குச் செல்லும்போது, வழியில் யாரோ முள்ளுள்ள மரக்கிளைகளை வெட்டிப் போட்டிருந்தார்கள். இதனைக் கண்ட அமீன் மிக்க துக்கமடைந்தான். அவன்' நண்பன் சலீமைப் பார்த்து "இங்கே பார் யாரோ வழியில் முட்கள் நிறைந்த மரக்கொப்புகளை வெட்டிப் போட்டுள்ளார்கள். இதனால் பாதையாற் செல்வோருக்கு கஷ்டந்தானே? முட்கள் குத்திவிட்டால் எவ்வளவு வேதனையாக இருக்கும்?" என்றான்.

இதனைக் கேட்ட அமீன் "அதற்கு நாமென்ன செய்வது? கொப்புகளைப் போட்டவர்கள் யோசிக்க வேண்டாமா?" என்றான்.

"அப்படிச் சொல்லக் கூடாது சலீம், மற்றவர்கள் தெரியாத்தனமாகச் செய்துவிட்டால் நாம் பார்த்துக்கொண்டு போவது நல்லதில்லைதானே? நாம் இருவரும் சேர்ந்து இவற்றை அள்ளி அதோ தெரிகிறதே அந்த மடுவில் போட்டுவிட்டுச் செல்வோம்"என்றான் அமீன்.

"உனக்கென்ன பயித்தியமா? பாடசாலை தொடங்க இன்னும் சற்று நேரந்தான் இருக்கிறது. இதில் ஈடுபட்டால் வேளைக்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாது போய்விடும், வா போவோம்" என அவசரப்படுத்தினான் சலீம்.

அவற்றை அப்படியே விட்டுச் செல்ல விரும்பாத அமீன் "அப்படியானால் நீ முன்னே செல், நான் அவற்றை அள்ளி வீசிவிட்டுப் பின்னால் வருகிறேன்", எனக் கண்டிப்பாக அமீன் கூறியதால் சலீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலையை நோக்கி நடந்தான்.

அமீன் அனைத்து கொப்புகளையும் அள்ளிக் குழியில் போட்டுவிட்டுப் பாடசாலைக்குச்சென்றான்.

பாடசாலை தொடங்கி காலைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிந்தி வருவோரைத் தண்டிப்பதாக உபஅதிபர் பாடசாலை வாயிலில் பிரம்புடன் நின்றுகொண்டிருந்தார். அவரைக் கண்டதும் அமீனுக்கு பயமேற்பட்டாலும் உண்மையை சொல்லுவோம் என்ற தைரியத்துடன் அவரை நோக்கிச் சென்றான். ஆசிரியர் அவனை நிறுத்திப் பிந்தி வந்ததற்கான காரணத்தைக் கேட்டபோது அவன் நடந்தவற்றை அப்படியே கூறினான்.

சின்ன வயதில் அமீன் நடந்துகொண்ட விதம் உபஅதிபருக்கு ஆச்சரியத்தை கொடுத்ததோடு அவன் மீது நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தியது. உடனே அவனை அதிபரிடம் அழைத்துச் சென்று அவனது செயலை மெச்சிக் கூறினார்.

அதிபர் அவனைப் பாராட்டியதோடு, அவனை மேடையில் ஏற்றி அவனது உதவி செய்யும் மனப்பான்மையையும் மிக மிக மெச்சிப் பேசினார். அத்தோடு அவனுடைய நற்செயலுக்காக தனது பைகட்டில் இருந்து ஒரு நூறு ரூபாய்த் தாளை எடுத்துப் பரிசாகக் கொடுத்துப் பெருமைப்படுத்தினார். கூடி இருந்த மாணவர்கள் கைதட்டி தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த சலீம் தனது செயலை நினைத்து வெட்கமடைந்து வருந்தினான். அன்று முதல் சலீம் மற்றவர்களுக்கு உதவி செய்யும் எண்ணத்தை மனதிற்கொண்டு கருமமாற்றத் தொடங்கினான்.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. பாடம் படித்த பன்றி

ஒரு காட்டின் நடுப்பகுதியில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரை ஓரமாய்ப் புற்கள் செழித்து வளர்ந்திருந்தன. அந்தப் புற்களை ஒரு கலைமான் அமைதியாக மேய்ந்துக்கொண்டிருந்தது. அந்நேரம் எங்கோ இருந்து ஓடிவந்த பன்றி தனது மூஞ்சியினால் புற்களைக் கிண்டி கிழங்கு போன்றவற்றைத் தின்னத் தொடங்கியது.

செழித்து வளர்ந்திருந்த புற்களைக் கிண்டி உழக்கி நாசப்படுத்துவதைக் கண்ட மானுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. என்றாலும் மான் ஒன்றும் பேசாது தன்பாட்டில் மேய்ந்துகொண்டிருந்தது. தொடர்ந்தும் பன்றி புல்லைக்கிண்டி நாசஞ்செய்வதை மானால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, மான் பன்றியை நிமிர்ந்து பார்த்து "ஏன் தம்பி புல்லைக் கிண்டி நாசப்படுத்துகிறாய்? என்னைப் போல நீயும் அமைதியாக மேய்ந்தால் நாளைக்கும் உணவு கிடைக்குமல்லவா? வீணாக நாசப்படுத்தாது அமைதியாக மேயலாமே" என்று கனிவாகக் கூறியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான் கூறியதைக் கேட்டதும் பன்றிக்கு கோபம் வந்துவிட்டது. தலையை நிமிர்த்தி மானை முறைத்துப் பார்த்துவிட்டு மீண்டும் உழக்கத் தொடங்கியது. இச்செய்கை மானுக்குக் கோபத்தை ஏற்படுத்தினாலும் தனது அமைதியான தன்மையை விட்டுவிடாது, "ஏன் தம்பி கோபமாய்ப் பார்க்கின்றாய்? நான் ஏதும் பிழையாகச் சொல்லவில்லையே?" என மான் அமைதியுடன் கேட்டது.

மானுடைய கேள்விகள் பன்றிக்கு மேலும் கோபத்தை ஊட்டின. "எனக்கா நீ புத்தி சொல்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று சத்தமிட்டவாறு மான் மீது சீறிப்பாய்ந்தது.

அமைதியாக நின்ற மானுக்குப் பன்றியின் செயல் அதிர்ச்சியாக இருந்தாலும் தன்னைத் தாக்கவரும் எதிரியிடம் இருந்து தப்பிக்கொள்வதற்காக சமயோசிதமாக தனது தலையைத் தாழ்த்தி கொம்பை நிமிர்த்தியது. அவ்வளவுதான், பாய்ந்து ஓடிவந்த பன்றி மானின் கொம்புகளில் மாட்டிக்கொள்ள மான் அப்படியே பன்றியைத் தூக்கி வீசியது. எதிர்பாராத தாக்குதலாற் காயமடைந்த பன்றி, உயிர் தப்பினாற்போதும் என்றவாறு வேறு திசையை நோக்கி ஓட்டமெடுத்தது.

♣♣♣




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. சரியான தண்டனை

முன்னொரு காலத்தில் தேவாபுரி என்னுமொரு கிராமம் இருந்தது. அது மிகவும் பின்தங்கிய கிராமம். அந்த கிராமத்தில் கதிரமலை என்றொருவர் இருந்தார். அவர் அந்த கிராமத்தில் படித்தவராக இருந்ததால் அந்த கிராமத்து வேலைகளைக் கவனிக்கும் பொறுப்புக்களை அந்நாட்டு அரசன் அவரிடம் கொடுத்திருந்தான். அவர் எவ்வளவுதான் கற்றவராக இருந்தாலும் பெரிய கஞ்சத்தனமுடைய உலோபியாக இருந்தார்.

இவர் வேளைக்குச் சாப்பிடமாட்டார். சாப்பிட்டாலும் கொஞ்சமாகவே சாப்பிடுவார். அவ்வாறே தனது மனைவி மக்களையும் உண்ணும்படி செய்வார். உடுப்பதிலும் மற்றவருக்கு கொடுப்பதிலும் மிகவும் கருமியாகவே இருந்தார். தனது குடும்பத்திற்காகச் செலவு செய்யும்போதும் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக செலவு செய்ய முடியுமோ அவ்வாறே செலவு செய்வார். இதனால் அவரிடம் நிறையப் பணமும் சொத்துக்களும் நிரம்பி இருந்தன. அதன் காரணமாக அவர் அக்கிராமத்தில் பெரியதொரு அதிகாரி போல் நடந்துகொண்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை அந்நாட்டு அரசன் உணவு விநியோக சம்மபந்தமாக ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொருவரை நியமித்தார். தேவாபுரி கிராமத்திற்கு இவர் நியமிக்கப்பட்டார். உணவு விநியோகப் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டதும் முதலில் இவர் அரசனின் கட்டளைப்படி அந்த கிராமத்திற்கு வருடத்திற்கு எவ்வளவு உணவு தேவைப்படும் என கணக்கிட்டார். உணவுப் பொருட்கள் அவர் எதிர்பார்த்ததைவிட பல மடங்கு தேவைபட்டதால் அப்படியே மயக்கமடைந்து விட்டார்.

அன்று முழுவதும் அவருக்கு அதே சிந்தனையாகவே இருந்தது. எவ்வாறு இந்த உணவு விநியோகத்தை குறைக்கலாமெனப் பலவாறு சிந்தித்தபோது அவருக்கு ஒரு யோசனை தட்டுப்பட்டது. தன்னைப் போல் கிராமத்திலுள்ள அனைவரும் குறைவாக உணவை உட்கொண்டால் உணவுப்பொருட்களை மீதப்படுத்துவதோடு, பணத்தையும் மிச்சம் பிடிக்கலாம் எனத் தோன்றியது.

அத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். அதன்படி குறைந்த அளவுக்கான உணவுக் கூப்பன்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அதற்கேற்ப உணவு வகைகளும் கொடுக்கப்பட்டன.

கொடுக்கப்பட்ட உணவுப்பொருட்கள் மக்களின் தேவைக்கு போதாமையாக இருந்ததால், காலப்போக்கில் மக்கள் மெலிவடையத் தொடங்கினர். போஷாக்கின்மை காரணமாக மக்கள் மத்தியில் பல வகை நோய்களும் பரவத்தொடங்கின. இதனால் மக்கள் பல இன்னல்களை அனுபவித்தனர். நாட்கள் செல்லச்செல்ல மக்கள் மத்தியில் இவருக்கு எதிர்ப்புகள் தோன்றத்தொடங்கின. இதனால் பல குழப்பங்களும் ஏற்பட்டன.

மக்கள் அவரை சந்தித்து தமது நிலைமைகளை எடுத்துக்கூறியும் கொஞ்சமும் அவர் அவற்றுக்குச் செவிமடுக்கவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த மக்கள் அவரை பிடித்துச்சிறையிட்டனர். சிறையிடப்பட்ட அவருக்கு என்ன தண்டனை வழங்குவதென மக்கள் ஆராய்ந்தனர். பலரும் பலவகையான தண்டனைகளைக் கூறினர். எல்லாம் பழைய தண்டனையாக இருந்ததால் அவற்றைவிடுத்து புதுமையான தண்டனை கொடுக்கவே பலர் விரும்பினர். அப்போது அக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த ஒரு பாடசாலை மாணவன் எழுந்து “இவர் எங்களை பட்டினி போட்டு வதைத்தவர். நாங்கள் இவருக்கு சாப்பாடு கொடுத்து வதை செய்வோம். எவ்வாறென்றால், இவருக்கு காலை உணவாக இருபது இட்லிகளும், பதினைந்து அப்பங்களும், இருபது இடியப்பங்களும், பத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழல்பிட்டும், முப்பது தோசைகளும் கொடுப்போம். அத்தோடு ஒரு பெரிய பானை நிறைய தேநீரும் கொடுக்க வேண்டும். பகற் சாப்பாடாக ஒரு அண்டா நிறையச் சோறும், ஐந்து சட்டி கறிகளும் கொடுப்போம். இதேபோல் இரவுச்சாப்பாட்டிற்கு ஒரு பெரிய பானை சோறும், பத்து இறாத்தல் பாணும் அதற்களவான கறிகளும் கொடுப்போம். இவற்றையெல்லாம் அவர் கொஞ்சமும் மிச்சமில்லாது சாப்பிட்டு முடிக்கவேண்டும். இவ்வாறு ஒரு மாதம்வரை செய்வோம்" என்றான்.

அவனது புத்திசாலித்தனமான யோசனை எல்லோருக்கும் சரியெனப்பட்டதால் அதனையே செய்வதாக அனைவரும் ஏற்றுக்கொண்டனர். இதனை கேட்டுக்கொண்டிருந்த கதிரமலை மயக்கம் போட்டு கீழே விழுந்தவர் எழுந்திருக்கவேயில்லை.


♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. ஆபத்துக்குதவிய பிள்ளை

ஒரு சிறிய கிராமத்தில் ஓர் ஏழை தொழிலாளி இருந்தான். அவனுக்கு மூன்று புதல்வர்கள் இருந்தார்கள். அவர்கள் மூவரையும பாடசாலைக்கு அனுப்பி கல்வி பயில வைத்தான். அவர்கள் மூவரும் பாடசாலைக்குச் செல்லும் வேளை அவர்களது தாய் மூவருக்கும் கைச் செலவுக்காக சம அளவான பணத்தைக் கொடுத்து அனுப்பிவைப்பாள். அவர்கள் அந்தப் பணத்தை தாம் விரும்பியவாறு செலவு செய்வர்.



மூத்த மகன் தனக்கு கிடைத்த பணத்தைக் கொண்டு விளையாட்டுப் பொருட்களையோ அல்லது வேடிக்கைப் பொருட்களையோ வாங்குவான். இரண்டாமவன் வாய்க்கு உருசியான தீன்பண்டங்களை வாங்கி உண்பதிற் செலவு செய்வான். மூன்றாம் மகன் தனக்கு தேவையானவற்றை மட்டும் வாங்கிக்கொண்டு மீதியை யாருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாவண்ணம் சேமித்து வைத்தான். அத்தோடு பாடசாலை விடுமுறையான நாட்களில் அவனால் செய்யக்கூடிய சிறிய சிறிய கூலித் தொழில்களைச் செய்து கிடைக்கும் வருவாயையும் தனது சேமிப்பில் சேர்த்துக்கொள்வான். இப்படி சில வருடங்கள் கழிந்தன.

ஒரு நாள் மூவரும் பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்தபோது, அவர்களது தகப்பன் ஒரு மூலையில் இருந்தபடி முனங்கிக்கொண்டிருந்தார். தாய் கவலையுடன் அழுதபடி சுவரில் சாய்ந்துகொண்டிருந்தாள். இவற்றைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்தவர்களாகத் தாயிடம் ஓடிச்சென்று என்ன நடந்ததென்று வினவினர்.

தந்தைக்கு கடமையான சுகவீனம் ஏற்பட்டுள்ளதாகவும் அவரை வைத்தியரிடம் அழைத்துச் செல்ல பணம் இல்லாது இருப்பதாகவும் தாய் அழுதபடி கூறினாள். இதனைக் கேட்ட மூவரும் என்னசெய்வதென்று யோசிக்கலாயினர். அப்பொழுது இளைய மகன் அறைக்குள் சென்று புத்தகங்களை வைத்துவிட்டு அங்கிருந்த பழைய காட்போட் பெட்டி ஒன்றை தூக்கிக்கொண்டு வெளியே வந்தான். அதனுள் பழைய கொப்பிகளும் புத்தகங்களும் நிறைந்திருந்தன. அவைகளையெல்லாம அள்ளி வெளியிற் போட்டான். அப்பெட்டியின் அடியில் இருந்து ஒரு உண்டியலை வெளியே எடுத்தான். அந்த உண்டியலை தனது தாயிடம் கொண்டுவந்து கொடுத்து, "அம்மா, கவலைப்படாதீங்க, நான் இதுகாலவரை சேமித்துவந்த பணம் இதோ இருக்கிறது. இதனைக் கொண்டு அப்பாவுக்கு வைத்தியம் செய்வோம்" எனக் கூறியபபடி உண்டியலை உடைக்கும்படி கூறினான்.

தாய்க்கு தன் மகனின் சேமிப்பு உண்டியலை உடைக்க மனவருத்தமாக இருந்தாலும் அன்றைய நிலையில் அவளால் ஒன்றுமே செய்ய முடியாதிருந்ததால் உண்டியலை மெதுவாக தட்டி உடைத்துக்கொட்டினாள். அதனுள் அத்தனையும் பத்து ரூபாய், ஐந்து ரூபாய் நாணயங்களாகவே இருந்தன. இதனைக் கண்ட தாய்க்கு அழுகைக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறியது. மகனை வாரி அணைத்து முத்தமிட்டாள்.

இவற்றையெல்லாம் இமைவெட்டாது பார்த்துக்கொண்டிருந்த மற்றைய இருவரும் வெட்கப்பட்டவர்களாக தலைகுனிந்து நின்றனர்.


♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. அயோக்கியனும் திருடனும்

ஒரு நாள் சாஜித் வழமைபோல் பாடசாலை விட்டு வந்ததும் பள்ளிவாயலுக்குச் சென்று தொழுதுவிட்டு வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானான். அவ்வேளை பெரியவர் ஒருவர் பள்ளிவாயலின் ஒரு மூலையில் இருந்தவாறு இறைவனைத் தியானித்துக்கொண்டு இருப்பதைக் கண்டான். அவர் வயது சென்ற ஒருவராகவும் இருந்தார். அவருடன் உரையாடி அவரது தியான நிலையைக் குழப்ப விரும்பாத சாஜித் அன்னாரை சிறிது நேரம் நின்று அவதானித்து விட்டு சென்றான்.



மாலை நேரமும் தொழுவதற்காக பள்ளி வாயலுக்கு வந்த சாஜித் அந்தப் பெரியவர் இருந்த திக்கை நோக்கினான். என்ன ஆச்சரியம் அவர் அதே இடத்தில் தியானித்த வண்ணமே காணப்பட்டார்.

சாஜித் தொழுகையை முடித்துக்கொண்டு அந்தப் பெரியவர் இருக்கும் இடத்திற்குச் சென்றான். அவர் கண்களை மூடிய வண்ணம் தியானித்த படியே இருந்தார். தான் வந்துள்ளதை பெரியவர் அறியும் பொருட்டு மெல்லிய ஒலியில் கனைத்தான். சத்தத்தைக் கேட்ட பெரியவர் கண்களை திறந்து முன்னால் நோக்கினார். தன் முன்னால் ஓர் இளைஞன் நிற்பதைக் கண்டு "அஸ்ஸலாமு அலைக்கும்" என சலாம் கூறினார். அவனும் பதிலுக்கு "வஅலைக்குமுஸ்ஸலாம்" எனக் கூறிவிட்டு அவர் முன்னால் அமர்ந்தபடி அவரை உற்று நோக்கினான்.

இதனைக் கண்ட அவர் "என்ன தம்பி அப்படி பார்க்கிறீங்க?" என்று கேட்டபடி அவரது இரு கரங்களாலும் அவனது கைகளைப் பற்றிப்பிடித்து வாழ்த்துக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஜித் சிரித்தபடி "பெரியவரே நான் உங்களை பகற்பொழுதிலிருந்தே அவதானித்து வருகிறேன். நீங்க இதே இடத்தில் இருந்தபடியே தியானித்துக் கொண்டு இருக்கிறீர்களே ஏதாவது சாப்பிட்டீர்களா?" எனப் பணிவாகக் கேட்டான்.

பெரியவர் சிரித்தபடியே "இதுவரை எதுவுமே சாப்பிடவில்லை தம்பி, ஆண்டவனின் நாட்டம் இன்னும் வரவில்லை போல் இருக்கிறது." எனக் கூறிவிட்டு சாஜித்தின் முகத்தைக் கூர்ந்து நோக்கியவாறு புன்னகைத்தார்.

"நீங்கள் வெளியூரா? எனச் சாஜித் கேட்கவும், "ஆம்" எனத் தெரிவித்து விட்டு, கையில் வைத்துள்ள மணிக்கோவையிலுள்ள மணிகளை உருட்டியபடி தியானிக்கத் தொடங்கினார்.

"பெரியவரே, இன்றிரவு எங்களது ஊரில் உள்ள பணக்காரர் ஒருவரின் வீட்டில் பெரியதொரு விருந்துபசாரம் நடைபெறவுள்ளது. அங்கு தானும் செல்லப் போகிறேன். தாங்களும் வரச் சம்மதித்தால் உங்களையும் அழைத்துச் செல்கிறேன்." எனக் கூறிவிட்டு சாஜித் அவருடைய முகத்தை நோக்கினான்.

அவருடைய முகத்தில் முன்பு காணப்பட்ட சந்தோஷ உணர்ச்சி மாறி, கோபக் குறியின் சாயல் தென்படத் தொடங்கியது. இது சாஜித்திற்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்தது. "நான் பிழையாக ஏதும் சொல்லிவிட்டால் என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் பெரியவரே" எனப் பணிவாகக் கேட்டான்.

"பரவாயில்லை, நீ வருத்தடையாதே, அறியாமை காரணமாக அப்படி அழைத்துவிட்டாய் போல் தெரிகிறது. நான் சொல்வதை கொஞ்சம் அவதானித்து கேள். நம்மை விருந்துக்காக அழையாத ஒருவர் கொடுக்கின்ற விருந்துண்ண நாம் செல்வோமாயின், விருந்துண்ண உட்செல்லும்போது ஒரு அயோக்கியனாகவும் விருந்து உண்டுவிட்டு வெளியே வரும்போது ஒரு திருடனாகவும் மாறிவிடுவோம். எனவேதான் நான் அதை விரும்புவதில்லை. நீ அழைக்கப்பட்டிருந்தால் கட்டாயம் அவ்விருந்தில் கலந்துகொள், ஏனென்றால், அழைப்பவரின் விருந்தை அலட்சியம் செய்வது கூடாது. ஆகவே, நீ சென்று வா, இறைவன் எனக்கு ஒரு வழி காட்டாமல் விடமாட்டான்." எனக் கூறிவிட்டு முறுவலித்தார்.

பசித்திருந்த வேளையிலும் அவர் சமயத்தில் வைத்திருந்த உறுதியான பக்குவ நிலையை உணர்ந்த சாஜித், அவரை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று சுவையான விருந்தளித்து மகிழ்வித்ததோடு தானும் மகிழ்ச்சி அடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. எதிர்பாராத அதிஷ்டம்

ஒரு அநாதைச் சிறுவன் இருந்தான். அவன் கூலி வேலை செய்து அதனாற் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தான். ஒவ்வொரு நாளும் காலையில் அவன் அவ்வூரில் அப்பம் சுட்டு விற்கும் ஒரு வீட்டாரின் அப்பங்களை ஊருக்குள் விற்றுக்கொடுப்பது வழக்கம். இதனால் அவனுக்கு இரண்டு அப்பங்கள் கூலியாகக் கிடைக்கும்.



அவன் வாழ்ந்த தெருவில் ஒரு வயது முதிர்ந்த பாட்டியும் வாழ்ந்து வந்தார். அந்தப் பாட்டிக்கு உதவி செய்வார் யாருமில்லை. இந்த ஏழைப் பையன் அந்தப் பாட்டிக்கு தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பான். அத்தோடு காலையில் தனக்கு கிடைக்கும் இரண்டு அப்பங்களையும் அந்தப் பாட்டிக்கே கொடுத்து விடுவான். அதனால் பாட்டிக்கு அவன் மீது மிகவும் விருப்பம் இருந்தது.

வழக்கம் போல் ஒரு நாள் அந்தப்பையன் தனக்குக் கிடைத்த அப்பங்களைப் பாட்டிக்குக் கொடுப்பதாக பாட்டியின் குடிசைக்குச் சென்றான். அங்கே பாட்டி கடுமையான காய்ச்சலினால் எழும்ப முடியாது முனகிக்கொண்டு படுத்திருந்தார். அவன் பாட்டியின் அருகிற் சென்று பாட்டியை எழுப்பினான். பாட்டி கண்களைத் திறந்து அவனைப் பார்த்தார். ஆனால், அவரால் எழும்ப முடியவில்லை. அவரது கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. இது அவனுக்கு பரிதாபமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கொண்டு வந்த அப்பங்களை அங்கேயே வைத்துவிட்டு ஓடோடிச் சென்று தன்னிடம் இருந்த பணத்தைக் கொடுத்து காய்ச்சலுக்கான குளிசைகளை வாங்கி வந்தான். அவற்றைப் பாட்டியை விழுங்கச் செய்துவிட்டு, கொஞ்சம் தண்ணீரைப் பருகக்கொடுத்தான். சிறிது நேரம் பாட்டியை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு தொழிலுக்காக வெளியே போனான்.

அந்திநேரம் பாட்டிக்கு சில தின்பண்டங்களை வாங்கிக்கொண்டு பாட்டியின் குடிசைக்கு வந்தான். பாட்டி எழுந்து சாய்ந்துகொண்டிருந்தார். பாட்டியின் கையைத்தொட்டுப் பார்த்தான். காய்ச்சல் தணிந்திருந்தது. மீதியாக இருந்த குளிசைகளை பாட்டிக்கு விழுங்கக்கொடுத்தான். தான் வாங்கி வந்திருந்த தின்பண்டங்களையும் உண்ணவைத்தான்.

சாப்பிட்டு முடிந்ததும் பாட்டி அவனை தன் அருகே அழைத்து "மகனே நீ பெற்ற பிள்ளையைப்போல் எனக்கு எத்தனையோ உதவிகளைச் செய்திருக்கிறாய; உனக்கு ஆண்டவன் நல்ல வாழ்வைத் தருவான். நான் இனிமேல் பிழைக்கமாட்டேன். அதோ இருக்கிறதே அந்த செப்புக்குடத்தை எடுத்து வா" எனக் கேட்டார்.

அவன் எழுந்து சென்று அந்தப் பழைய செப்புக்குடத்தைத் தூக்கி வந்து பாட்டியிடம் கொடுத்தான். அதனுள் கையைவிட்டு ஒரு சிறிய டப்பாவை எடுத்த பாட்டி, அதனை அவனிடம் கொடுத்து "இதனுள் என் கணவருடைய பெறுமதிமிக்க மோதிரம் ஒன்று இருக்கிறது, இதனை நீ எடுத்துக்கொள் ஆனால், யாரிடமும் காட்டிவிடாதே, நீ நல்ல நிலையில் வாழ்வாய். அதுவரைக்கும் மோதிரத்தை பத்திரமாக வைத்துக்கொள்" எனக் கூறி அவனிடம் கொடுத்தார்.

பாட்டி கூறியபடி மோதிரத்தை பத்திரமாக வைத்துக்கொண்டான். இரண்டாம் நாள் பாட்டி இறந்துவிட அவருடைய ஈமக்கிரியைகளைச் சிறப்பாக செய்து முடித்தான்.

அவன் வளர்ந்து வாலிபனாக வந்ததும் பாட்டியின் சொற்படி அம்மோதிரத்தைப் பல இலட்சம் ரூபாய்களுக்கு விற்றுப் பெரும் பணக்காரனாக வாழ்ந்ததோடு பாட்டியின் பெயரில் ஒரு தர்மசாலையையும் நடாத்தி வந்தான்.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. ஒழுக்கம் உயர்வைத் தரும்

ஆசிரியர் ஒருவர் தனது வகுப்பு மாணவர்களான நசீர், சுலைமான் ஆகிய இருவரையுமே அழைத்து "நீங்கள் இருவரும் அகமது முதலாளியின் வீட்டுக்குச் சென்று, அவர் தமது பாடசாலை நூல் நிலையத்திற்கு சில புத்தகங்கள் தருவார் கேட்டு வாங்கி வாருங்கள்" என்று கூறி அனுப்பிவைத்தார்.

சுலைமான் சற்று துடிப்பான சுபாவம் உடையவன். நசீர் அமைதியும் ஒழுக்கமும் நிறைந்தவன். இருவரும் நடந்து செல்லும்போது "நான் முன்னே ஓடிச்சென்று புத்தகங்களை வாங்கி வருகிறேன் பார்" என்று சுலைமான் கூறிவிட்டு நசீரின் பதிலையும் எதிர்பாராது அகமது முதலாளியின் வீட்டை நோக்கி வேகமாக ஓடினான். அவனைத் தடுத்தாலும் நிற்கமாட்டான் என்பதைத் தெரிந்திருந்த நசீர் பின்னால் அமைதியாக நடந்து சென்றான்.

ஓடிச் சென்ற சுலைமான் முதலாளியின் வீட்டின் முன்கதவு திறந்திருந்ததைக் கண்டு சந்தோஷத்துடன் கூப்பிடாமலே உள்ளே சென்றான். சாய்வுநாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்த முதலாளி, திடீரென ஒரு பையன் எவ்வித அழைப்பும் இல்லாது வீட்டினுள் வருவதைக் கண்டு "ஏய், நில் அங்கே, நீ யார்?" எனக் கடுமையான தொனியிற் கேட்டார். அவருடைய அதட்டலை பொருட்படுத்தாத சுலைமான் "நீங்கள் எங்கள் பாடசாலை நூல் நிலையத்திற்கு புத்தகங்கள் தருவதாகச் சொன்னீர்களாம்; அவற்றை வாங்கி வருமாறு ஆசிரியர் அனுப்பினார். அவற்றைத் தாருங்கள்" என மரியாதை இன்றி படபட எனக்கேட்டான்.


அவன் வீட்டினுள் நுழைந்த விதமும் புத்தகங்களைக் கேட்ட பாங்கும் முதலாளிக்கு எரிச்சலை ஊட்டியதால், 'என்னிடம் புத்தகங்களும் இல்லை, ஒன்றுமில்லை ஓடு வெளியே" எனத் துரத்திவிட்டார்.

முதலாளியின் வீட்டுக்குச் சென்ற சுலைமான் வெறுங்கையோடு திரும்பி வருவதைக் கண்ட நசீர் "அவசரப்பட்டு ஓடிப்போனாயே, புத்தகங்கள் கிடைக்கவில்லையா?" எனக் கேட்டான்.

"அவர் புத்தகமும் இல்லை, ஒன்றுமில்லை. ஓடு வெளியே என்று துரத்துகிறார்" என்றான் சுலைமான். இதனைக் கேட்ட நசீருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்தேகமாகவும் அதேநேரம் அவரிடம் சென்று புத்தகங்களை கேட்பதற்கு தயக்கமாகவும் இருந்தது. இருந்தாலும் சுலைமான் ஏதோ தவறுவிட்டிருக்கலாம் என்ற நம்பிக்கையுடன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சுலைமானையும் தன்னுடன் வருமாறு அழைத்தான். ஆனால், சுலைமான் மறுத்துவிட்டு இடைவெளியில் நின்றுகொண்டான்.

நசீர் முதலாளியின் வீட்டை அடைந்ததும் திறந்திருந்த கதவின்மீது தனது கையில் இருந்த பேனையால் மெல்ல மெல்ல தட்டினான்.

கதவில் தட்டும் சத்தம் கேட்டு, "யாரது?" என்று கேட்டவாறு முதலாளி எழுந்து வந்து பார்த்தார். அவரைக் கண்டதும் "அஸ்ஸலாமு அலைக்கும்" என நசீர் முதலாளிக்கு சலாம் சொன்னான்.

"வலைக்குமுஸ்ஸலாம்" எனப் பதில் கூறிய முதலாளியிடம், "உள்ளே வரலாமா?" என மரியாதையுடன் அனுமதி கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாராளமாக வா" என அழைத்த முதலாளியைத் தொடர்ந்து அவன் உள்ளே சென்றான். உள்ளே சென்ற நசீரிடம் ஓர் ஆசனத்தைக் காட்டி உட்காருமாறு கேட்டார்.

"பரவாயில்லை எனக்கு இருப்பதற்கு நேரமில்லை, வகுப்பில் பாடங்கள் நடந்துவிடும், நான் வகுப்புக்குச் சமுகமளிக்க வேண்டும், நீங்கள் எங்களது பாடசாலை நூல்நிலையத்திற்குச் சில புத்தகங்களைத் தருவதாகச் சொன்னீர்களாம்; அவற்றை வாங்கி வருமாறு ஆசிரியர் அனுப்பினார்." என்று மிக்க மரியாதையுடன் கூறினான்.

"அப்படியா, கொஞ்சம் தாமதியுங்கள்" என்று கூறியபடி உள்ளே சென்ற முதலாளி சிறிது நேரம் கழித்து ஒரு புத்தகப்பொதியைக் கொண்டு வந்து நசீரிடம் கொடுத்தார். அவற்றை இரு கைகளினாலும் வாங்கிக்கொண்ட நசீர், "மெத்தப் பெரிய உபகாரம்" என நன்றி கூறிவிட்டு வெளியே வர ஆயத்தமானான்.

அப்போது "தம்பி நீ நல்ல பழக்கவழக்கங்கள் உள்ளவனாய் இருக்கிறாய், உன்னைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது, இந்தப் பேனையை என் அன்பளிப்பாக வைத்துக்கொள்" எனக் கூறியவாறு ஓர் அழகான பேனை ஒன்றை அவனிடம் நீட்டினார். அதனை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்ட நசீர் அவருக்கு நன்றி செலுத்திவிட்டு வெளியே வந்தான்.

சுலைமானிடம் நடந்தவற்றை நசீர் கூறியதும் சுலைமான் தனது செயலை நினைத்து வருத்தமடைந்ததுடன் வெட்கமுமடைந்தான்.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. நல்ல தேடல்

ஒருநாள் ஒருவர் வெளியூருக்கு பிரயாணம் செய்வதற்காக பஸ் வண்டியை எதிர்பார்த்து பாதையோரம் நின்றார். அப்போது திடீரென மழை பெய்யத் தொடங்கியது. உடனே அவர் தன் பொதிகளையும் தூக்கிக்கொண்டு பக்கத்திலிருந்த வீட்டின் தாழ்வாரத்தின் கீழ் போய் நின்றார். இதனைக் கண்ட வீட்டு சொந்தக்காரர் அவரை உள்ளே வந்து அமருமாறு கதவைத் திறந்துவிட்டார். பிரயாணி பொதிகளுடன் உள்ளே சென்று அமர்ந்துகொண்டார்.

நீண்ட நேரமாக மழை பெய்ததால் பிரயாணியால் வெளியே வந்துகொள்ள முடியவில்லை. சில பஸ் வண்டிகளும் போய்விட்டன. மழை ஓயும்வரை பிரயாணி அங்கேயே அமர்ந்திருந்தார். கடைசியாக மழை ஓரளவு குறையத் தொடங்கியது. அவ்வேளையில் ஒரு பஸ் வண்டி வரவே பிரயாணி பொதிகளுடன் ஓடிவந்து அவ்வண்டியில் ஏறிக்கொண்டார்.



பிரயாணி சென்று சிறிது நேரமாகிவிட்டது. வீட்டு சொந்தக்காரர் கதவை அடைப்பதற்காக அந்த அறைக்குள் வந்தார். அப்போது பிரயாணி இருந்த கதிரையின் பக்கத்தில் ஒரு பார்சல் இருப்பது அவருடைய கண்களிற்பட்டது. அவர் அதனை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அதனுள் பல தங்க ஆபரணங்கள் இருந்தன. அவற்றைக் கண்டதும் வீட்டுச் சொந்தக்காரருக்கு ஒரு சபலபுத்தி ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆபரணங்களைத் தான் எடுத்துக்கொள்ள ஆசைப்பட்டார். யாருக்கும் தெரியாவண்ணம் அவற்றை எடுத்துச் சென்று வீட்டின் ஒரு புறத்தில் ஒளித்து வைத்தார்.

தனது இருப்பிடத்தை அடைந்ததும் பிரயாணி தான் கொண்டு வந்திருந்த பொதிகளை சரிபார்த்தார். அவரது தங்க ஆபரணப்பொதி இல்லாதிருப்பதைக் கண்டு பதைபதைத்தார். உடனே ஒரு மோட்டார் வண்டியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு தான் தங்கிச் சென்ற வீட்டுக்கு வந்தார்.

வீட்டுக்காரரிடம் தனது பொதியைப் பற்றி விசாரித்தார். வீட்டுக்காரரோ அவர் எல்லாப் பொதிகளையும் எடுத்துச்சென்றதாகவும் எதையும் விட்டுச்சென்றதாக தெரியவில்லை எனவும் கூறி சத்தியமும் செய்தார். இதனைக் கேட்ட பிரயாணி மிக்க துக்கத்தோடு அவ்வூர் கிராம சேவையாளரிடம் சென்று முறையீடு செய்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பினார்.

பிரயாணி சென்ற பின் வீட்டுக்காரருக்கு மெல்ல மெல்ல பயம் ஏற்படத் தொடங்கியது. ஒருவேளை பிரயாணி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தால் பொலிஸார் தனது வீட்டுக்கு வந்து சோதனை இடக்கூடும் என அச்சங்கொண்டார். பக்கத்து வீட்டுக்காரனின் வைக்கோல் குவியலுக்குள் மறைத்துவைத்தார்.

அந்திவேளை வயலில் இருந்து மாடுகளை வீட்டுக்கு கொண்டுவந்த பக்கத்து வீட்டு விவசாயி மாடுகளுக்காக வைக்கோல் எடுத்துவரச் சென்றான். அவன் குவியலில் இருந்து வைக்கோலை இழுத்து எடுக்கும்போது வைக்கோல் குவியலுக்குள் இருந்து ஒரு பொதி அவனது காலில் விழுந்தது. அதனை எடுத்து அவன் பிரித்துப் பார்த்தான். அதனுள் தங்க ஆபரணங்கள் இருப்பதைக் கண்டான். அதனை யாரோ களவாடிவந்து தனது வைக்கோல் குவியலுக்குள் வைத்திருக்கக்கூடும் என எண்ணிய அவன் அவற்றை எடுத்துச் சென்று கிராம சேவையாளரிடம் ஒப்படைத்ததோடு நடந்தவற்றையும் கூறினான்.

கிராம சேவையாளர் விவசாயின் நேர்மையான தன்மையை பாராட்டியதோடு சொந்தக்காரரையும் வரவழைத்து பொதியினைக் கையளித்தார்.

நல்ல வழியில் சம்பாதித்து தேடிய பொருட்கள் என்ற காரணத்தினாலேயே அப்பொருட்கள் தனக்கு திரும்ப கிடைத்திருப்பதாக கூறி பொருட்களின் சொந்தக்காரர், அவற்றைப் பெற்றுக்கொண்டதோடு, கண்டெடுத்தவருக்கு நன்றி கூறி, அன்பளிப்பாக இரண்டாயிரம் ரூபாய்ப் பணமும் கொடுத்துவிட்டுச் சென்றார்.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. கொடுப்பார்க்கு குறைவில்லை

ஊரில் பெரிய செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரிடம் அளவுக்கு அதிகமான செல்வங்கள் நிறைந்து கிடந்தன. அவர் அச் செல்வங்களில் இருந்து தன்னை நாடி இரந்து வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வாரி வழங்கி வந்தார். அதனால் அவரது புகழ் பல திக்கும் பரந்திருந்தது. அவரை எல்லோரும் மிக்க அன்போடு மதித்தார்கள்.

அவர் இவ்வாறு தன்னிடமிருந்த செல்வங்களைக் கேட்டு வருபவர்களுக்கெல்லாம் அள்ளியள்ளிக் கொடுத்ததால் காலப்போக்கில் அவரது செல்வம் கரைந்து வறுமை நிலைக்கு தள்ளப்பட்டார். என்றாலும் அதைப் பற்றிக் கவலைப்படாது தன்னிடம் இருப்பவற்றை கேட்பவர்களுக்குக் கொடுத்துக்கொண்டே இருந்தார்.

இதன் காரணமாக அவரது குடும்பம் வறுமை நிலையை அடைந்தது. அவரிடம் அவர் குடியிருந்த வீட்டைத் தவிர வேறு எதுவுமே இல்லாது போயிற்று. என்றாலும் அவர் தான் எல்லாவற்றையும் இறைவனுக்காகவே கொடுத்ததாக எண்ணி நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் காணப்பட்டார்.

ஒரு நாள் அவரும் குடும்பத்தினரும் உண்பதற்கு போதுமான உணவு இல்லாது இருந்தபோது, ஒரு பெரியார் வெளியூரில் இருந்து செல்வந்தரின் வீட்டை நாடிவந்தார். வந்தவரை மகிழ்ச்சியோடு வரவேற்று உட்கார வைத்துவிட்டு, செல்வந்தர் அவரைப் பற்றி விசாரித்தார். அப்போது அந்தப் பொரியார் தான் வெளியூரைச் சேர்ந்தவர் என்றும், செல்வந்தரின் ஈகைச்சிறப்பைக் கேள்வியுற்று தனது கஷ்டங்களைப் போக்கிக் கொள்வதற்காகப் பொருள் உதவி நாடி வந்ததாக கூறினார்.

இதனைக் கேட்ட செல்வந்தரின் மனம் மிகமிக வேதனைப்பட்டது. தன்னிடம் கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லையே என்று வருந்தினார். என்றாலும் கொடுப்பதற்கு ஏதும் பொருள் தப்பித்தவறி கிடைக்கமாட்டாதா? என அங்குமிங்கும் தேடினார். ஆனால், ஒரு சதம் காசுகூட அவருக்கு கிடைக்கவில்லை. மிகவும் மனவேதனையுடன் பெரியாரின் முன்வந்த செல்வந்தர், "பெரியவரே, என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்துதவ என்னிடத்தில் எந்தப் பொருளுமே தற்போது இல்லாதிருக்கிறது, ஆனால், நாங்கள் குடியிருக்கும் இந்த வீடு மட்டும்தான் தற்போது என்னிடம் எஞ்சியுள்ளது. நீங்கள் விரும்பினால் அதனைத் தங்களுக்குத் தரச் சித்தமாயுள்ளேன். அதனை விற்றுக்கிடைக்கும் பணத்தைக் கொண்டு உங்களது கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்ளுங்கள்" என மரியாதையோடு கூறினார்.

செல்வந்தரின் ஈகைத் தன்மையை எண்ணிப் பெரியார் மனதுக்குள் மகிழ்ந்துகொண்டார். "எனக்கு உங்களது வீட்டைத் தந்துவிட்டு நீங்களும் உங்களது குடும்பமும் எங்கே குடியிருக்கப் போகிறீர்கள்?" எனப் பெரியார் கேட்டார்.

"அதைப் பற்றி நீங்கள் கவலை அடைய வேண்டாம், எங்களுக்கு ஆண்டவன் ஏதோ ஒரு வழியைக் காட்டாமலா போவான்? உங்களது கஷ்டங்கள் தீர்ந்தால் அதுவே எங்களுக்கு பெரிய திருப்தியாகும்" என செல்வந்தர் மிகவும் பணிவுடன் கூறினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந்தருக்கு ஆண்டவன் மேல் இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும் அவரது ஈந்துதவ துடிக்கும் சிறந்த மனப்பான்மையையும் கண்டு வியந்த பெரியார் முற்றத்தில் நின்ற ஒரு வாழைமரத்தைச் சுட்டிக்காட்டி, "நீங்கள் எனக்குப் பொன்னையோ பொருளையோ தரவேண்டாம் அதோ நிற்கிறதே அந்த வாழைமரத்தை மட்டும் தந்தால் போதுமானது" என்று கேட்டார்.

செல்வந்தர் ஆச்சரியத்துடன் பெரியாரை நோக்கினார். "செல்வந்தரே எனக்குப் பெரிதாக ஒன்றுமே தரவேண்டாம், அந்த வாழையை மட்டும் நீங்கள் விரும்பினால் தாருங்கள்" என மீண்டும் கேட்டார். உடனே பெரியவரின் விருப்பத்தை நிறைவேற்ற ஓடிச்சென்ற செல்வந்தர், அடுத்த வீட்டில் இருந்த ஒரு மண்வெட்டியை இரவல் வாங்கி வந்து வாழைமரத்தைப் பிடுங்குவதற்காகப் பூமியைக் கொத்தினார். இரண்டு முறை பூமியைக் கொத்தியதும், ஏதோ ஒரு கடினமான பொருளில் மண்வெட்டி பட்டு "கணீர்" என்ற சத்தத்தை எழுப்பியது.

சத்தத்தை செவியுற்ற செல்வந்தர் கொத்துவதை நிறுத்திவிட்டு கையினால் மண்ணைத் தோண்டிப் பார்த்தார். வாழைமரத்தின் அடியில் ஒரு செப்புப்பானை இருப்பது தெரிந்தது. அவர் தனது பலம் முழுவதையும் பாவித்து செப்புப்பானையை வெளியே எடுத்தார். என்ன ஆச்சரியம், பானை நிறைய தங்கக்காசுகள் காணப்பட்டன.

பெரியவரை அழைத்துவந்து காட்டுவதற்காக செல்வந்தர் வீட்டினுள் ஓடிச்சென்றார். அங்கு பெரியாரைக் காணாது திகைத்து நின்றார்.

அப்போது வீட்டின் முகட்டில் இருந்து "மகனே, உனது பாரிய ஈகைத் தன்மைக்காக அளிக்கப்பட்ட பரிசில்களே அந்த தங்க நாணயங்களாகும். அவற்றை எடுத்து நீ மீண்டும் செல்வந்தனாகி, மற்றவர்களுக்கு உதவி செய்து வருவாயாக" என்றதொரு அசரீரி கேட்டு செல்வந்தர் அப்படியே அசந்து நின்றார்.

பின்பு செல்வந்தர் ஆண்டவனுக்கு நன்றி செலுத்திவிட்டு, அந்த நாணயங்களைக் கொண்டு பெரிய செல்வந்தனாகவும் கொடையாளியாகவும் வாழ்ந்து வந்தார்.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. பலநாட் கள்ளன் ஒருநாள் அகப்படுவான்

ஒரு வீட்டில் எலித்தொல்லைகளைப் பொறுக்கமுடியாத வீட்டுக்காரர் ஒரு பூனையை வளர்த்து வந்தார். அந்தப் பூனை அவ்வீட்டில் தொல்லைகள் கொடுத்துவந்த அநேக எலிகளைப் பிடித்து கொன்றுவிட்டது. ஒரேயொரு சுண்டெலி மட்டும் அதனிடம் அகப்படாது தப்பிக்கொண்டு வாழ்ந்தது.

அவ்வெலியைப் பிடிப்பதற்காக பூனை எத்தனையோ முயற்சிகளை எடுத்தது. ஆனால், எலி ஏதோ ஒரு வழியிற் பூனையை ஏமாற்றிக்கொண்டே வந்தது. பூனையும் அதனை பிடித்து கொன்றுவிட ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான தந்திரத்தைக் கையாண்டது. என்றாலும் பூனையால் அந்த எலியைப் பிடித்துக்கொள்ளவே முடியவில்லை.

அந்த சுண்டெலி பொந்திலிருந்து வெளிவருவதும் அங்குமிங்கும் ஓடுவதும் கூரையில் ஏறிநின்று பூனைக்கு எத்தம் காட்டுவதும் பூனையால் பொறுக்க முடியாது இருந்தது. அதனால் பூனை அந்த எலிமீது மிக்க கோபம் கொண்டிருந்தது.



ஒருநாள் அந்தப் பூனை எலியைப் பிடிப்பதற்காக ஒரு தந்திரத்தைக் கையாண்டது. ஓர் ரொட்டித் துண்டைக் கொண்டுவந்து அந்த எலி குடியிருந்த பொந்தின் பக்கத்தில் வைத்துவிட்டு ஒரு பானையின் பின்னால் மறைந்திருந்தது.

ரொட்டித் துண்டின் வாசனை எலியின் மூக்கைத் துளைக்கவே, மெல்ல பொந்தில் இருந்தவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையை நீட்டி வெளியில் எட்டிப் பார்த்தது. அப்போது அந்த அறையில் வைக்கப்பட்டிருந்த அலுமாரியில் பொருந்தப்பட்டிருந்த கண்ணாடி எதிர்பாராத விதமாக எலியின் கண்ணில் பட்டது. அதனூடாக பூனை பானையின் பக்கத்தில் பதுங்கியிருப்பது தெரிந்தது. உடனே எலி "ஆஹா, பூனையாரே என்னைப் பிடிப்பதற்காக நீர் போட்ட திட்டமா இது? உன்னால் என்னைப் பிடிக்கவே முடியாது" என்று பூனைக்குக் கேட்கும்படி கூறிவிட்டு பொந்தில் ஓடி மறைந்தது. ஏமாற்றமடைந்த பூனை "உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கர்விக்கொண்டு சென்றது.

இதன் பிறகு அந்த பூனை எலியைப் பிடிக்க எடுக்காத முயற்சிகளே கிடையாது. ஆனால், எலி மிகத்தந்திரமாக தப்பிக்கொண்டே சென்றது.

ஒருநாள் வீட்டுக்காரர் நெல் அவிப்பதற்காக நெல்லைத் தண்ணீர்ப்பானைக்குள் கொட்டும்போது அதிலுள்ள பதர் நெல் தண்ணீரின் மேல் மிதப்பதைப் பூனை கண்டது. அப்போது பூனைக்கு ஒரு யோசனை தட்டுப்பட்டது. அன்றிரவு பூனை ஒரு பெரிய அண்டாவைக் கொண்டுவந்து அதனுள் தண்ணீர் ஊற்றி அதன்மேல் நெற்பதரைக் கொட்டி வைத்தது. நெற்பதர் மேலே மிதந்ததால் உள்ளே நிறைத்து வைத்திருந்த தண்ணீர் தென்படவில்லை. அந்த அண்டாவை இழுத்துவந்து எலி ஓடித்திரியும் வழியில் வைத்துவிட்டு தூரத்தில் போய் படுத்துக்கொண்டது.

எல்லோரும் படுத்து உறங்கியபின் எலி மெதுவாக பொந்தில் இருந்து வெளியாகி தீன் தேடியது. அவ்வேளை அண்டாவில் நிறைய நெல் இருப்பது தெரிந்தது. நெல்லைக் கண்டதும் எலி ஆசையோடு ஓடிவந்து அண்டாவினுள் குதித்தது. அவ்வளவுதான் எலி நீரில் மூழ்கி வெளியேர முடியாது தத்தளித்தது.

எலியின் தத்தளிப்புச் சத்தம் கேட்ட பூனை ஓடிவந்து அண்டாவினுள் எட்டிப்பார்த்தது. எலி அகப்பட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு "ஒருவனை ஒருமுறை ஏமாற்றலாம் பலமுறை ஏமாற்றமுடியாது என்பதை இப்போதாவது தெரிந்துகொள்" என்றவாறு எலியைப் பாய்ந்து கவ்விக்கொண்டு ஓடியது.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. செருக்கடக்கிய உபாயம்

ஒரு குளத்தங்கரையில் ஒரு ஆமையும் சில நத்தைகளும் ஒருசோடி முயல்களும் வேறுசில சிறிய பிராணிகளும் வாழ்ந்து வந்தன. இவைகளுடன் வாழ்ந்துவந்த ஆமை பெரும் தற்பெருமை கொண்டதாக நடந்துகொண்டது. "தம் இனத்தவர் முயலையும் ஓட்டப்பந்தயத்தில் வெற்றிக்கொண்டவர்." என அடிக்கடி பெருமைப்பட்டுக்கொள்வதும் செருக்குடன் நடப்பதும் அங்கு வாழ்ந்த மற்றவைகளுக்கு பிடிக்கவில்லை. அதனால், அவை ஆமையை மனதார வெறுத்தன. சிலவேளை நத்தைகளைப் பார்த்து "என்னுடன் ஓட்டப்பந்தயத்திற்கு வர முடியுமா?" எனக் கேட்டு கேலி செய்யும். இது நத்தைகளுக்கு பெரிய அவமானமாகவும் ஆத்திரமாகவும் இருந்தது. அவைகள் தமது இயலாமையை எண்ணி வேதனைப்பட்டன.

ஆமையின் இச்செயல் முயலுக்கும் கோபத்தை ஊட்டியது. முயல்கள் ஆமையை திருத்துவதற்காகப் பல வழிகளையும் கையாண்டன. ஆனால், ஆமையோ திருந்துவதாக தெரியவில்லை. எப்படியாவது ஆமைக்கு ஒரு பாடம் படிப்பிக்க முயல்கள் இரண்டும் கங்கணம் கட்டிக்கொண்டன.

ஒரு நாள் அங்கு வந்த முயல்களில் ஒன்று ஆமையைப் பார்த்து "அன்றொரு நாள் உமது இனத்தவரின் ஒருவர் எமது இனத்தைச் சேர்ந்த ஒருவரை ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றது தற்செயலாக நடந்த ஒரு சமபவம். இப்போது நீ எங்கள் இருவரின் ஒருவரோடு ஓட்டப்பந்தயத்தில் பங்கு கொள்ளத்தயாரா?" எனக் கேட்டது. தற்போது தனது கால் ஒன்றில் காயம் ஒன்று இருப்பதாகவும் இன்னொரு நாள் பார்ப்போம் எனவும் பொய் சாக்குச்சொல்லிவிட்டு ஆமை குளத்துக்குள் மூழ்கிவிட்டது.

இதனால் ஆத்திரம் அடைந்த முயல்கள் தமது வஞ்சம் தீர்க்கும் நோக்கத்தை நத்தைகள் மூலம் செயற்படுத்த முனைந்தன.

ஓர் நாள் நத்தைகளை தமது இருப்பிடத்திற்கு அழைத்த முயல்கள் ஏதோ ஓர் இரகசியத்தை எவரும் அறியாவண்ணம் அவைகளின் காதுகளில் கூறின. நத்தைகளும் அதனை ஏற்றுக்கொண்டதோடு அன்றிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிகவும் சந்தோஷமாகவும் காணப்பட்டன.

ஓர் இரவுவேளை நிலவு வெளிச்சத்தைப் 'பளிச்' என எறித்துக் கொண்டிருந்தது. அந்தக் குளக்கரையில் வசித்த அனைத்து உயிரினங்களும் தமக்கு தேவையான உணவுகளைத் தேடித்தேடி சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அவ்வேளை ஆமை வழமை போல் நத்தைகளைப் பார்த்து "நல்ல நிலவாக இருக்கிறது, உங்களில் எவராவது என்னுடன் ஓட்டப்பந்தயத்திற்கு வரமுடியுமா?" எனக் கேட்டுவிட்டு ஏளனமாக சிரித்தது.

அப்போது எதிர்பாராத விதத்தில் ஒரு நத்தை முன்னேவந்து "நான் வருகிறேன்" என சத்தமிட்டுக் கூறியது.

இதனால் அதிர்ச்சி அடைந்த ஆமை அதனைக் காட்டிக்கொள்ளாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளித்துக்கொண்டு "சரி வா ஓடிப்பார்ப்போம்" என்றது.

ஓட்டப்பந்தயத்தை ஆரம்பித்து வைக்க நத்தை ஒரு முயலை அழைத்தது. அதனை ஆமையும் ஏற்றுக்கொண்டது.

குளத்தங்கரையில் இருந்து தூரத்தில் காணப்பட்ட ஒரு மரத்தை வெற்றிக்கம்பமாக தீர்மானித்து அதனை யார் முதலில் ஓடிச்சென்று தொடுகின்றாரோ அவரே வெற்றிப்பெறுவார் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதனை நத்தையும் ஆமையும் ஏற்றுக்கொண்டன.

முயல் ஒரு கோட்டை வரைந்து அக்கோட்டில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக்ககொண்டது. அதன் பிரகாரம் ஆமையும் நத்தையும் ஓடுவதற்காக தயாராக நின்றன. அவ்வேளை முயலின் பின்னால் மெல்ல மெல்ல ஊர்ந்து வந்த வேறொரு நத்தை ஆமையின் பின்னால் வந்து அது அறியாவண்ணம் அதன் ஓட்டின் மேல் ஏறி அமர்ந்துகொண்டது.

முயல் போட்டியை ஆரம்பித்து வைத்தது. இரண்டும் ஓடத்தொடங்கின. ஆமை நத்தையைவிட வேகமாக ஓடியது. சிறிது தூரம் ஊர்ந்து சென்ற நத்தை ஆமை தன்னைவிட வேகமாக முன்னேறிச் செல்வதைக் கண்டதும் மெதுவாக பக்கத்தில் காணப்பட்ட ஒரு செடியினுள் பதுங்கிக்கொண்டது.

ஆமை ஓடிக்கொண்டே நடுவழியில் நத்தையை திரும்பிப் பார்த்தது. நத்தை தென்படவில்லை. "சின்னப் பயல் நிலா வெளிச்சத்தில் தெரியமாட்டான்." எனக் கூறிக்கொண்டு ஓட்டத்தைத் தொடர்ந்தது.

வெற்றிக்கம்பத்தை அடைவதற்து மிக சிறிய தூரம் இருக்கும்போது ஆமை ஓட்டத்தை நிறுத்திவிட்டு தனது பின்னங்கால்களால் உயர்ந்து, நத்தை ஓடி வருகிறதா? எனப் பார்த்தது. அவ்வேளை ஆமையின் ஓட்டின்மேல் ஒட்டிக்கொண்டிருந்த நத்தை மெல்ல இறங்கி விரைவாக ஊர்ந்து சென்று வெற்றிக்கம்ப மரத்தில் ஏறிக்கொண்டது.

"சின்னப் பயல் எப்போது வந்து சேர்வானோ தெரியவில்லை?" எனக் கூறிக்கொண்டு வெற்றிக்கம்பத்தை தொட திரும்பிய ஆமைக்கு அப்படியே மூச்சு நின்றுவிடும் போல் இருந்தது.

அங்கே வெற்றிக்கம்பத்தில் இருந்தவாறு நத்தை கலகலவெனச் சிரித்தது. பாரிய தாக்கமடைந்த ஆமை, வெட்கமடைந்து தலை குனிந்தபடி வேறொரு இடத்தைத் தேடி ஓடியது.


நத்தைகளும் முயல்களும் தங்களது தந்திரம் வெற்றி பெற்றதைக் கண்டு சந்தோஷமடைந்ததுடன் எதிர்காலத்தில் ஆமையின் தொந்தரவு இல்லாமலும் மகிழ்ச்சியாக வாழ்ந்தன.

♣♣♣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்விப்பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை
நூலகப் புத்தகமாக அனுமதிக்கப்பட்டுள்ளது

ISBN : 978-955-1711-61-0

விலை ரூபா: 75/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org